பக்கங்கள்: 12

# காலைக்கதிர்
Kalaikathir

விடியல் 04 வள்ளுவர் ஆண்டு 2051 பங்குனி 08 சனிக்கிழமை 21.03.2020 கதிர் 136

## இனிது ரகசியம் அல்ல!

இது உயர்பீட இரகசியம். உள்வீட்டு நெருக்கடி. மொட்டுக்கு வித்திட்ட சாணக்கியனின் இன்றைய சங்கட நிலைமை.

ஒரு பக்கம் தேசத்தின் தேர்தலுக்கு கொரோனாவினால் பங்கம் வந்து விடுமோ என்ற பயம் என்றால், மறுபக்கம்,

பக்கம் 02

# கொரோனா நோயாளிகள் 72!



## நாளுக்கு நாள் அதிகரிப்பால் நாடு அச்சத்தில்

கொழும்பு, மார்ச் 21

கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 2 பேர் நேற்று வெள்ளிக்கிழமை இரவு அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று சுகாதார அமைச்சர் பவித்திரா வன்னியாராச்சி தெரிவித்தார்.

நேற்று மட்டும் 13 பேர் இனங்காணப்பட்டுள்ளனர்.

இதனடிப்படையில் இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டோரின் எண்ணிக்கை 72 ஆக (ஜனவரியில் பாதிக்கப்பட்ட சீனப் பெண்ணுடன் 73பேர்) அதிகரித்துள்ளது.

நாட்டில் கொரோனா தொற்று அறிகுறி உள்ளவர்கள் 218 பேர்

பக்கம் 03

# நாட்டின் நெருக்கடி குறித்து ஆராய சர்வகட்சிக் கூட்டம் மிகவிரைவில்!

## நாடாளுமன்றை மீளக் கூட்டுவது குறித்தும் அதில் விரிவாக ஆராய்வதற்குத் தீர்மானம்

கொழும்பு, மார்ச் 21

கொரோனா வைரஸ் தாக்கத்தினால் நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைமை குறித்து ஆராய்வதற்காக சர்வகட்சிக் கூட்டம் ஒன்றை மிகவிரைவில் கூட்டுவதற்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ திட்டமிட்டிருக்கிறார் எனத் தெரியவருகின்றது.

பெரும்பாலும் இந்தச் சர்வகட்சிக் கூட்டம் அடுத்த வாரத்தில் நடைபெறலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது. கலைக்கப்பட்ட நாடாளுமன்றத்தை மீளக் கூட்டுவது தொடர்பிலும் இந்தக் கூட்டத்தில் ஆராயப்படவுள்ளதாகத் தெரிகிறது.

பக்கம் 03

## முடங்கியது யாழ். நகர்



(எஸ். நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், மார்ச் 21

இலங்கை முழுவதும் நேற்று வெள்ளிக்கிழமை நடைமுறைப்படுத்

பக்கம் 03

## ஊரடங்கை மீறினராம் 2 இளைஞர்கள் கைது

வவுனியா, மார்ச் 21

வவுனியாவில் ஊரடங்குச் சட்டம் அமுலில் இருந்தவேளை நேற்று மாலை 6.30 மணியளவில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இரு இளைஞர்கள்

பக்கம் 03

## வடமராட்சி கிழக்கில் கடற்படை தேடுதல்!

யாழ்ப்பாணம், மார்ச் 21

வடமராட்சி கிழக்குக் கடற்பகுதியில் நேற்றுக் காலை முதல் கடற்படையினர் தீவிர தேடுதல் வேட்டையில்

பக்கம் 03

## புத்தளத்திலிருந்து மன்னார் நோக்கி படகில் தப்ப முயன்ற 20 பேர் கைது!



கொழும்பு, மார்ச் 21

பொலிஸ் ஊரடங்குச் சட்டம் அமுலில் இருந்த வேளையில் கொச்சிக்கடை மற்றும் புத்தளம் பகுதிகளில்

பக்கம் 03

## கொரோனா தொற்றை மறைத்து சிகிச்சை பெற்றவர் மீது வழக்கு!

கொழும்பு, மார்ச் 21

கொரோனா தொற்றை மறைத்து ராகம வைத்தியசாலையில் சிகிச்சை பெற்ற முதியவருக்கு எதிராக நீதிமன்

பக்கம் 03

## முப்படையினரைக் கொண்டு கொரோனாவை தடுக்கலாமா?

### கேட்கிறார் ராஜித சேனாரத்ன

கொழும்பு, மார்ச் 21

போர் நிறைவு செய்ததைப் போன்று முப்படையினரைக் கொண்டு கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்

பக்கம் 03

# சிலரின் பொறுப்பற்ற செயற்பாடு காரணமாகவே ஊரடங்கு அமுல்!



## பிரதமர் மஹிந்த தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 21

சிலரின் பொறுப்பற்ற செயற்பாடு காரணமாகவே நாடு முழுவதும் ஊரடங்குச் சட்டத்தை நடைமுறைப்படுத்தவேண்டியேற்பட்டுள்ளது என்று பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரையிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

இது முழு உலகமும் கொரோனா தொற்றுநோய்க்கு முகங்

பக்கம் 03

## ஊரடங்கு நேரத்தில் வீதியில் சென்றால் வாகனம் பறிமுதல்

கொழும்பு, மார்ச் 21

ஊரடங்கு வேளையில் வாகனங்களில் நடமாடுபவர்களுக்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுக்கப்படும்

பக்கம் 03

## தம்புள்ளை மேயர் கைது!

கொழும்பு, மார்ச் 21

தம்புள்ளை மாநகர மேயரும், மற்றுமொரு நபரும் கைது செய்யப்பட்டுள்ளனர் எனப் பிரதிப் பொலிஸ்மா

பக்கம் 03

# கொரோனாவின் ஆபத்துக் கருதியாவது 84 தமிழ்க் கைதிகளையும் விடுவியுங்கள்

## முன்னாள் அரசியல் கைதியான முருகையா கோமகன் கோரிக்கை




கொழும்பு, மார்ச் 21

தென்னிலங்கை சிறைகளில் அடைத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் 84 பேரையும் தற்போதைய கொரோனா வைரஸ் தாக்கத்தை கருத்தில் கொண்டு ஆகக்குறைந்தது பிணையிலாவது விடுவிக்க இலங்கை ஜனாதிபதி முன்வரவேண்டுமென கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அரசியல் கைதிகளது குடும்பங்கள் சார்பில் முன்னாள் அரசியல் கைதியான முருகையா கோமகன் இக்கோரிக்கையினை விடுத்திருந்தார்.

யாழ்.ஊடக அமையத்தில் நேற்று வெள்ளிக்கிழமை ஊடக வியலாளர்களை சந்தித்த அவர் அங்கு கருத்து வெளியிடுகை யில –

தற்போது 84 அரசியல் கைதி கள் ஆகக்குறைந்தது பத்துவரு டங்கள் முதல் 20 வருடங்கள் வரை தடுத்து வைக்கப்பட்டுள்ள னர்.

உலகம்முழுவதும்கொரோனா வைரஸ்தொற்றினை தடுக்கவும் அதிலிருந்து தப்பிக்கவும் இனம், மதம் தாண்டி அனைவரும் போராடிக்கொண்டிருக்கின்றனர்.

ஈரானில் தடுத்து வைக்கப்பட் டிருந்த அனைத்துக் கைதிகளும் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

அண்மையில் மகசீன் சிறை யில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 300 சிறு தண்டனை கைதிகள் ஜனாதிபதியால் மன்னிப்பு வழங் கப்பட்டு விடுவிக்கப்பட்டுள்ளனர்.

ஆனால் தற்போது புதிய கைதி கள் எந்தவித சோதனைகளு மின்றி சிறைகளில் கொண்டுவரப் பட்டு அடைக்கப்படுகின்றனர்.

அனுராதபுரத்தில் தமிழ் அரசியல் கைதிகள் பாரிய குற்றச் செயல்களின் அடிப்படையில் மரண தண்டனை விதிக்கப்பட்ட கைதிகளுடன் தற்போது சேர்த்து அடைத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இத்தகைய சூழல் அரசியல் கைதிகளிடமும் அவர்களது குடும்பங்களிடமும் அச்சத்தை தோற்றுவித்துள்ளது.

தற்போதைய சூழலை கருத்தில் கொண்டு அரசியல் கைதிகளை பிணையிலோ நிபந்தனை அடிப் படையிலோ குடும்பங்களுடன் இணைந்து வாழ ஜனாதிபதி அனுமதிக்கவேண்டுமென கோம கன் கோரிக்கை விடுத்துள்ளார்.

# மாணவர்கள் வீட்டிலிருந்து கற்க கல்வியமைச்சு ஏற்படுத்திய வசதி

கொழும்பு, மார்ச் 21

எதிர்வரும் பாடசாலை விடு முறை காலத்தில் கல்வி நட வடிக்கைகளில் தொடர்ந்து ஈடு படுவதற்காக கல்வி அமைச் சினால் இணைய கல்விக்கூடம் என்றபெயரில் www.e-thaksalawa.moe.gov.lk என்ற இணையத்தளம் அறிமுகப்படுத்தப்பட் டுள்ளது.

இந்த இணையதளம் தமிழ், சிங்களம் மற்றும் ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் காணப்படுகின்றது.

இதில், தரம் 1 முதல் தரம் 13 வரை அனைத்து பாடத்திட்டங்களும் உள்ளடக்கப்பட்டுள்ளன.

மேலும், ஆரம்பப் பிரிவிற் கான எ – பாடங்கள் மற்றும் மேலதிக வாசித்தல் கையேடு கள், e – புத்தகசாலை, சிங்கள – தமிழ் அகராதி, பெரியார்களின் சுயசரிதை, வினாத்தாள்கள் (தரம் 1-11 க.பொ.த.சா.தரம் / உயர்தம்கடந்தகாலவினாத்தாள் கள் / மாதிரி வினாத்தாள்கள்), பொழுதுபோக்கு அம்சங்கள் (கல்விசார் விளையாட்டுக்கள்/ பாடல்கள்), பிரி வெனாவிற்குரிய பாடங்கள், விசேட தேவையுடைய மாணவர்களுக்கான பாடங்கள் ஆகியன இதில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

# கொரோனா வைரஸ் வைரஸ் பரவாமல் தடுப்பதற்காக கடற்படை நடவடிக்கை

நாட்டில் புதிய கொரோனா வைரஸ் வைரஸ் பரவாமல் தடுப்பதற் காக இலங்கை கடற்படையின் தொற்று நீக்கும் திட்டம் இன்று நேற்று கோட்டை ரயில் நிலையம் மற்றும் கொழும்பு துறைமுக வளாகத்தில் தொடங்கப்பட்டது.

கடற்படையின் வேதியியல், உயிரியல், கதிரியக்க மற்றும் அணுசக்தி அவசரநிலை பதிலளிப்பு பிரிவு கொழும்பு கோட்டை ரயில் நிலையத்தை இரண்டாவது முறையாக தொற்று நீக்கம் செய்து, அதன் அனைத்து வளாகங்களிலும் கிருமி ஒழிப்பு மேற்கொண்டது.

துறைமுக வளாகத்தில் அமைந்துள்ள துறைமுகப் பகுதிகளிலும் இலங்கை கடற்படை இத் திட்டத்தைத் தொடங்கியுள்ளது, மேலும் இதுபோன்ற நெரிசலான இடங்களில் வைரஸ் பரவாமல் தடுப்பதற்காக கடற்படை இத்திட்டங்களை செயல்படுத்தி வருகிறது

நேற்று கோட்டை ரயில் நிலையம் மற்றும் கொழும்பு துறைமுக வளாகத்தில் இது தொடங்கப்பட்டது.





## இனி…

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மொட்டின் அரசியல் மலர்வுக்கும் அதனால் குந்தகம் வந்துவிடுமோ என்ற நெருக்கடி.

அண்மையில் ஒரு செய்தி. எல்லோரும் கண்ணால் மேயும் தகவலாக அதை வாசித்துத் தாண்டிப் போயிருப்பர்.

கொரோனாத் தொற்றினால் பாதிக்கப்பட்டவர்களில் ஒருவர் வறக்காப்பொலபகுதியைச்சேர்ந்த பிரதேச சபை உறுப்பினர் என்ற அந்தச் செய்தியை சாதாரண வாசகர்கள் அப்படித்தான் மேம் போக்காக மேய்ந்து விட்டுச் சென்றிருப்பர்.

ஆனால் விடயம் அங்குதான் ஆரம்பிக்கின்றது. தமது பிரதேசத் தில் செல்வாக்கு மிக்கவரான இந்தப்பிரதேசசபை உறுப்பினரை ஆட்சிப் பீடத்தின் சாணக்கியர் தமது அரசியல் திட்டங்களை வகுப்பதற்கான ஆலோசனைக் காக அழைத்துப் பேசியிருக்கின் றார். கைலாகு கொடுத்து நெருக்க மாக அமர்ந்து பேசியிருக்கின்றார்.

அந்தந்தப் பிரதேசத்துக்குரிய வேட்பாளர்களைத் தெரிவு செய்வதற்கு முன்னர் அப்பகுதி அரசியல் பிரபலங்களுடன் ஓர் அலசல் நடத்துவது அந்தச் சாணக்கியரின் வழமையான பணியியல்பு. அதுதான் இப்போது வம்பாக வந்து முடிந்து விடுமோ என்ற பேரச்சத்தை எழுப்பியி ருக்கின்றது.

வேட்பாளர் தெரிவுக்கு முன் னர் கைகொடுத்து, நெருக்கமாக அமர்ந்து உரையாடிச் சென்ற பிரதேச சபை உறுப்பினருக்கு கொரோனாத் தொற்று இருப்பது இப்போதுதான் வெளிப்பட்டிருக் கின்றது. அந்த வைரஸை அந்தப் பிரதேச சபைத் தலைவர் நமது அரசியல் சாணக்கியருக்கும் கொடுத்துச் சென்றிருப்பாரோ என்ற சந்தேகம் அதிகாரத் தரப் பாருக்கு.

அதற்காக சாணக்கியரையும் தனிமைப்படுத்த முடியுமா? முடியாதல்லவா?

இதுதான் கொழும்பில் இப் போது அதிகம் பேசப்படும் சிக்கல். இரண்டு வார காலத்துக்கு சாணக்கியர் அண்ணன்மாரைச் சந்தித்துப் பழகுவதும் உசிதமான தல்ல என்கின்றன வைத்திய வட்டாரங்கள்.

★ ★ ★

நேற்றுக் காலை ஒரு தொலை பேசி அழைப்பு. எடுத்தவர் வடக்கு மாகாண அவைத் தலைவர் சி.வீ.கே.சிவஞானம்.

அவர் மீது எனக்கு எப்போதும் மரியாதை உண்டு – அரசியல் கருத்து வேறுபாடுகள் இருந்தா லும்.

யுத்தத்தின் விளைவுகளால் பெரிதும் நேரடியாக பாதிக்கப்பட்ட போதும் மண்ணை விட்டு ஓடாதவர். நல்லூரில் தியாகி திலீபனுக்கு முதல் முதலில் நினைவுத் தூபி அமைத்தவர். இந்தியப் படைகள் இங்கு ஆக்கிரமித்திருந்த காலத் தில் துணிச்சலுடன் பணியாற் றிய அவரின் ஆளுமை கண்டு நாம் வியந்திருக்கின்றோம்.

என் எழுத்துக்களில் பல சம யங்களில் நான் அவருடன் இணங்கு வதில்லை. ஆனால் எங்களுக்குள் ஒரு புரிந்துணர்வு இருந்தது. இருக்கின்றது. பல சமயங்களில் நாங்கள் agree to disagree.

நேற்று சீற்றத்துடன் தொலை பேசி எடுத்தார்.

“நானும்தான் பார்த்துக் கொண்டிருக்கிறன். எந்த நாளும் மாவையாரை அடிக்கிறது தான் உங்கடை வேலையாகப் போய் விட்டது. அது ஏன் வெளியாள் களைத் தேடிப் பிடித்து வந்து மாவையாரைப் போட்டுத் தாக்க வைக்கிறியள்..?” –என்று சினந் தார்.

நேற்றுமுன்தினம் எமது மாலைப் பதிப்பில் வந்த ஒரு கட்டுரைதான் அவரைச் சூடேற் றியிருக்கின்றது. “அரசியல் அறம் மறந்த மாவை” என்ற தலைப் பில் அந்தக் கட்டுரை பிரசுரமாகி யிருந்தது. எழுதியவர் புருஜோத் தமன் தங்கமயில். ‘தமிழ் மிரர்’ பத்திரிகையில் வந்த அந்தக் கட்டுரையை ‘காலைக்கதிர்’ மாலைப் பதிப்பு மீள் பிரசுரம் செய்திருந்தது.

இன்னொரு பத்திரிகையில் வந்த கட்டுரையை தேடிப் பிடித்து மாவையாரைப் போட்டுத் தாக்கு வதற்காக எங்கள் பத்திகை மீள் பிரசுரம் செய்திருக்கின்றமை ஏன் என்பதுதான் அவரது சீற்றத்தின் உள்ளடக்கம்.

“ஏன் வெளியாரைத் தேடிப் பிடித்து வந்து மாவையாரைப் போட்டுத் தாக்குறியள்…?” என்று அவர் கேட்டதும் நான் ஒரு மறுத்தான் எடுத்து விட்டேன்.

“நாம் மற்றப் பத்திரிகையி லிருந்து களவெடுத்து அந்தக் கட்டுரையைப் பிரசுரிக்கவில்லை. சம்பந்தப்பட்ட பத்திரிகையின் ஆசிரியரோடு தொடர்பு கொண்டு அவர் அனுமதி பெற்றே பிரசுரித் தோம். – அதில் விடயம் இருப்பதா கக் கருதியமையால். அதில் தவறு ஏதும் இருந்தால் – கருத் துப் பிழை இருக்குமானால் – நீங்கள் தாராளமாக மறுக்கலாம். விவரமாக எழுதலாம். நாம் பிர சுரிப்போம். அதேயளவு முக்கி யத்துவம் கொடுப்போம். அது வேறு விடயம். ஆனால், நீங்கள் குறிப்பிட்ட ஒரு விடயம் நெருட லாகஇருந்தது. நாங்கள் வெளி யாட்களைத் தேடிப் பிடித்து வந்து மாவையைத் தாக்குகின்றோம் என்ற குற்றச்சாட்டு. அந்தக் கட் டுரையாளர் யார்? நீங்கள் அண் மையில் உங்கள் கட்சி சார்பில் கொள்கை விளக்கத்துக்காக வீர சிங்கம் மண்டபத்தில் நடத்திய கூட்டத்தில், உங்கள் கட்சியினரே அழைத்துப்பேசவிட்ட உள்வீட்டுப் பேச்சாளர்தான். அவர் மாவை யாரைத் தாக்கிப் பேசினார் என் பதால் வெளியாளாகி விடுவாரா? ” என்று கேட்டேன் நான்.

சிவஞானம்ஐயாவிடம்எனக்கு விளக்கம் தருவதற்கு பல விடயங் கள் இருந்தன. ஆனால் same side goal அடிப்பவர்களைத் தம் கட்சிக்காரர்களே தங்கள் கூட்டத் துக்குக் கூப்பிட்டுப் பேச விட்டு வாங்கிக் கட்டும் போது தாம் என்ன செய்ய முடியும் என்ற ஆதங்கத் தில் அடங்கிப் போனார் அவர்…!

- மின்னல் -

காலைக்கதிர் Kalaikathir



## சிலரின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) கொடுத்துள்ள சந்தர்ப்பமாகும். இந்த நிலைமையைக் கட்டுப் படுத்துவதற்கு மேற்கொள்ள முடியுமான அனைத்து நட வடிக்கைகளும் மேற்கொள்ளப் பட்டுள்ளன என்பதை நீங்கள் அறிவீர்கள்.

இந்த தொற்றுநோய் பரவு வதற்கு ஆரம்பித்த சந்தர்ப்பத்தி லிருந்து நாம் அது தொடர்பாக மிகுந்த கவனத்துடன் செயற்பட் டோம். நாம் அவ்வாறு மிகுந்த கவனத்துடன் செயற்பட்ட கார ணத்தினாலேயே நோய் ஆரம் பித்த சீனாவின் வூஹான் பிரதேசத்திலிருந்த இலங்கை யர்களை உலகின் ஏனைய நாடுகளுக்கு முன்னர் காப்பாற்றி இலங்கைக்கு அழைத்து வர முடிந்தது.

உங்களது உயிர் தொடர்பாக நாம் செலுத்திய கவனத்தை எந்தவொரு சந்தர்ப்பத்திலும் நாம் குறைத்துவிடவில்லை. அவர் இலங்கையில் இருந்தா லும், வேறொரு நாட்டிலுள்ள இலங்கையராக இருந்தாலும் அவரது உயிரைப் பாதுகாப்பதற்கு நாம் நடவடிக்கை மேற்கொள் வோம். அந்தப் பொறுப்பு காரண மாகவே தம்பதிவ யாத்திரைக்குச் சென்ற குழுவினரை இலங் கைக்கு அழைத்து வருவதற்கு நாம் அனைத்து விடயங்களை யும் தயார் செய்துள்ளோம்.

அதனால் ஒரு நோயாளி தொடர்பாக அல்லது நோயாளி யொருவருடன் பழகிய ஒருவர் தொடர்பாக அறியக் கிடைத்தவு டன் அவரைத் தனிமைப்படுத்தி அவதானிப்பதற்கு நாம் நட வடிக்கை மேற்கொண்டோம். அவ்வாறு கவனஞ் செலுத்தி யமையினாலேயே ஆயிரக் கணக்கானவர்களைப் பல நாள் களாக ஓரிடத்தில் தடுத்து வைத்து உணவு குடிபானங்கள், மருந்து களை வழங்கி தனிமைப்படுத்தி அவதானிக்க இயலுமானது. நாடு என்ற வகையில் அது கடின மான பணி என்பதை விளக்க வேண்டியதில்லை.

எந்தளவு கடுமையான தொற்றுநோயாக இருப்பினும், எந்தளவு கடுமையான பணியாக இருப்பினும் மக்களின் கஷ்டங் களைக் குறைக்கும் வகையி லேயே அரசு செயற்படுகிறது என்பதை உங்களுக்குக் கூற விரும்புகிறேன்.

நாம் பிள்ளைகளின் பாது காப்புக்காக பாடசாலைகள், பல் கலைக்கழகங்களுக்கு விடுமுறை வழங்கினோம். படிப்படியாக விமா னப் பயணங்களைக் கட்டுப்படுத் தினோம், வருகை தரும் முனை யம் மூடப்பட்டுள்ளது.

நாட்டு நிலைமை மற்றும் உலக நிலைமையைக் கருத்திற் கொண்டு படிப்படியாகவே நாம் இவற்றைச் செய்தோம். நாம் எதிர் காலத்திலும் இவ்வாறு தான் செயற்படுவோம்.

நான் உங்களுக்கு உரையாற் றும் இச்சந்தர்ப்பத்தில் நாடு முழு வதும் ஊரடங்குச் சட்டம் நடை முறைப்படுத்தப்பட்டுள்ளது.

உலகின் கடுமையான தீவிர வாதத்திற்கு எதிராகச் செயற்பட்ட காலத்திலும் எமக்கு ஒரே தடவை யில் முழு நாட்டிலும் ஊரடங்குச் சட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டிய தேவை ஏற்படவில்லை. எனினும் சிலரின் பொறுப்பற்ற செயற்பாடு காரணமாக இன்று எமக்கு இந்த நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டியேற்பட் டுள்ளது.

இந்தச் சந்தர்ப்பத்தில் உங் களது, உங்கள் பிள்ளைகளது உயிர்களைப் பாதுகாப்பதற்கா கவே நாம் இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளோம். இத னால் ஏதாவது அசௌகரியங் கள் ஏற்படின் நாம் அது தொடர் பாக வருந்துகிறோம்.

அத்துடன் உங்களது நாளாந்த வாழ்க்கைக்குத் தேவையான அனைத்தையும் எம்மால் வழங்க முடியும். பல மாதங்களுக்குத் தேவையான அளவு மருந்துகள், உணவு - குடிபானங்கள், எரி பொருட்கள் என்பன எம்மிடம் உள்ளன. அது தொடர்பாக சந் தேகிக்கவோ, தேவையற்ற குழப் பத்தை ஏற்படுத்திக்கொள்ளவோ வேண்டாம்.

நான் இதற்கு முன்பு தெரி வித்தது போன்று எமது அரசு மக் களுக்குஎதையும் மறைப்பதில்லை. எமது அனைவரினதும் பாது காப்புக்காக நோயாளிகள் தொடர்பான, நோயின் இயல்பு தொடர்பான தகவல்களை மிக விரைவாக மக்களுக்கு வழங்கு கிறோம்.

முழு உலகமும் மிகவும் கடின மான நிலைமையை எதிர்நோக்கி யுள்ள இந்தச் சந்தர்ப்பத்தில் மிகவும் யோசித்து, தூரநோக்கு டன் செயற்படுமாறு நான் வேண் டிக்கொள்கிறேன். மருத்துவர்கள் வழங்கும் அறிவுறுத்தல்கள், அரசு வழங்கும் அறிவுறுத்தல் களை முறையாக நீங்கள் பின் பற்றுவீர்களாயின், எமக்கு மிக விரைவில் இந்தத் தொற்று நோயி லிருந்து மீள முடியும் என நம்பு கிறேன். நாம் ஒரே நாட்டு மக்கள் என்ற வகையில் இந்த இடர் நிலைமையில் ஒன்றிணைந்து நிற்போம்.

நாட்டு மக்கள் என்ற வகை யில் நாம் இதனை விடவும் பெரிய சவால்களை வெற்றிகொண்டுள் ளோம். நாம் அனைவரும் இந்த இடரிலிருந்து மீள்வதற்கான பலத்தினைக் கொண்டுள்ளோம் என நம்புகிறேன் - என்றார். (ஐ)

## ஊரடங்கை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) பொலிஸாரால் கைது செய்யப் பட்டுள்ளனர்.

வவுனியா மணிக்கூட்டு கோபு ரச் சந்தியில் கடமையில் இருந்த பொலிஸார் மோட்டார் சைக்கிளில் பயணித்த இளைஞர்களை வழி மறித்துள்ளனர். பொலிஸாரின் சைகையை மீறி இருவரும் அதி வேகமாக மோட்டார் சைக்கிளை செலுத்தித் தப்பிச் சென்றனர்.

அப்பகுதியில் கடமையில் ஈடுபட்டிருந்த வவுனியா போக்கு வரத்துப் பொலிஸ் குழுவினர் அந்த இருவரையும் துரத்திச் சென்று பூங்கா வீதியில் வைத்து மடக்கிப் பிடித்து கைதுசெய்தனர்.

கைது செய்யப்பட்ட இருவருக் கும் எதிராக ஊரடங்கு சட்டம் அமுல்படுத்திய பின்னர் சென் றமை, மதுபோதையில் வாகனம் செலுத்தியமை, பொலிஸாரின் சைகையை மீறிப் பயணித்தமை போன்ற பல்வேறு பிரிவுகளில் வழக்குத் தாக்கல் செய்யவுள்ள னர் எனப் பொலிஸார் தெரிவித்த னர்.

கைது செய்த இருவரையும் பொலிஸாரின் வாகனத்தில் ஏற் றிச் சென்றனர். (ஐ)

## புத்தளத்திலிருந்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) இருந்து மன்னாருக்குக் கடல் வழியாகத் தப்பிச் செல்ல முயன்ற 20 பேர் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களில் 3 பேர் பெண்களாவர்.

கொரோனா வைரஸ் பரவுவதை இல்லாதொழிக்க அரசு பல்வேறு செயற்பாடுகளில் ஈடுபட்டுவரும் நிலையில் நாட்டில் மக்களின் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்தும் நோக்கில் ஊரடங்குச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

இந்நிலையில் ஊரடங்குச் சட்டத்தை மீறுவோரைக் கைது செய்ய நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டதன் அடிப்படை யில் மேற்படி 20 பேரும் கடற் படையினரால் கைது செய்யப் பட்டுள்ளனர்.

இவர்கள் ஊரடங்குச் சட்டம் நடைமுறையில் இருந்த நேரத் தில் கடல் வழியாகத் தப்பிச் செல்ல முயன்றனர் எனத் தெரிவிக்கப் பட்டுள்ளது. (ஐ)

## தம்புள்ளை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) அதிபர் பொலிஸ் ஊடகப் பேச்சா ளர் அஜித் ரோஹன தெரிவித் துள்ளார்.

தற்போதைய நிலையில், சைக்கிள் ஓட்டப் போட்டி ஒன்றை ஏற்பாடு செய்ததன் காரணமாக அவர்கள் கைது செய்யப்பட்டுள்ள னர் எனத் தெரிவிக்கப்படுகின் றது. (ஐ)

## கொரோனா நோயாளி..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) வைத்தியசாலைகளில் கண் காணிக்கப்படுகின்றனர்.

அத்துடன், மட்டக்களப்பு, வவுனியா உள்ளிட்ட 14 தனி மைப்படுத்தல் நிலையங்களில் 2 ஆயிரத்து 300 பேர் வரை தங்கவைத்து கண்காணிக்கப் படுகின்றனர். (ஐ)

## வடமராட்சி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) ஈடுபட்டனர்.

அந்தக் கடற்பகுதி ஊடாக அடையாளம் தெரியாத சிலர் படகுகள் மூலம் நாட்டுக்குள் வந்துள்ளனர் எனத் தெரிவித்து இந்த தேடுதல் வேட்டை நடத்தப் பட்டுள்ளது.

இதன்போது அப்பகுதி மீன வர்கள் கடுமையான சோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர் என அங்கிருந்து கிடைக்கும் தகவல் கள் தெரிவித்தன.

இந்தத் தேடுதல் நடவடிக்கை யின் போது மீனவர்களின் அடை யாள அட்டைகளும் பரிசோதிக் கப்பட்டுள்ளன. எனினும், சந்தேகத் தின் பேரில் எவரும் கைது செய் யப்படவில்லை என தெரியவரு கிறது. (ஐ-07)

## முடங்கியது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) தப்பட்ட ஊரடங்குச் சட்டத்தை அடுத்து யாழ். நகரம் வெறிச்சோடிக் காணப்பட்டது.

கொரோனா வைரஸ் தொற் றைத் தடுக்கும் நோக்கில் நேற்று மாலை 6 மணி முதல் நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 6 மணி வரை நாடு முழுவதும் ஊரடங்குச் சட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளது.

இந்த ஊரடங்குச் சட்டத்தை மீறுபவர்களுக்கு எதிராக கடும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படு மென்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

அதே நேரம் அத்தியாவசிய தேவைகள் மற்றும் ஊடகங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இவ்வாறான நிலையில் நேற்று மாலை 6 மணிக்கு ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டபோதும் சில வர்த்தக நிலையங்கள் இயங்கி ன. அவற்றைப் பூட்டுமாறு பொலி ஸார் அறிவுறுத்தியதற்கமைய அனைத்து வர்த்தக நிலைய களும் பூட்டப்பட்டன.

இதனையடுத்து யாழ் நகரம் வெறிச்சோடிக் காணப்பட்டது. பொது மக்களும் வீடுகளுக்குள் முடங்கியுள்ளனர். (ஐ-07)

# செட்டிகுளத்தில் அரச ஊழியர் ஒருவர் வைரஸ் சந்தேகத்தில் ஆஸ்பத்திரியில்!

வவுனியா செட்டிகுளம் பிரதேச செயலகத்தில் கடமையாற்றும் அரச உத்தியோகத்தர் ஒருவர் கொரோனா வைரஸ் தாக்கியுள் ளது என்ற சந்தேகத்தின் அடிப் படையில் வவுனியா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள் ளார்.

வவுனியா செட்டிகுளத்தை சேர்ந்த இந்த நபர் வெளிநாட்டில் வசிப்போருடன் தொடர்புகளைப் பேணியதன் காரணத்தினால் சந்தேகத்தின் அடிப்படையில் நேற்றுக் காலை அம்புலன்ஸ் மூலம் வவுனியா பொது வைத்தி யசாலையின் தொற்றுநோய் பிரிவில் அனுமதிக்கப்பட்டார்.

அவரை பரிசோதித்த வைத்தி யர்கள் அவரின் இரத்த மாதிரி களை பெற்று அனுராதபுரம் வைத்தியசாலைக்கு மேலதிக பரிசோதனைகளுக்காக அனுப்பி வைத்துள்ளனர்.

## கொரோனா தொற்றை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) றத்தில் வழக்கு தொடரப்பட்டுள் ளது.

பொலிஸ் பேச்சாளர் அஜித் ரோஹண நேற்று இதனைத் தெரிவித்தார்.

இத்தாலியிலிருந்து வந்ததை மறைத்து, முதியவர் ஒருவர் ராகம வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றிருந்தார். அவருக்கு கொரோனா தொற்று ஏற்பட்டிருந் தமை பின்னர் தெரிய வந்தது.

அவரது பொறுப்பற்ற தன்மை யினால் 15 வைத்தியசாலைப் பணியாளர்கள் மற்றும் நோயா ளர்கள் தனிமைப்படுத்தப்பட் டுள்ளனர்.

அவர் இத்தாலியிலிருந்து வந்ததை மறைத்திருந்தார். அத்துடன் தனக்கு கொரோனா ஏற்பட்டிருந்ததை அறிந்திருந்தும் நெஞ்சு வலியெனக் குறிப்பிட்டே சிகிச்சை பெற்றிருந்தார்.

அவர் மீது வத்தளை நீதிவான் நீதிமன்றத்தில் வழக்கு தொடரப் பட்டுள்ளது. (ஐ)

## நாட்டின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) நாட்டில் கொரோனா வைரஸ் பரவல் காரணமாகப் பெரும் நெருக்கடி நிலை ஏற்பட்டுள்ளது. நாளுக்கு நாள் அதிகரிக்கும் வைரஸ் தொற்றுக் காரணமாக இதுவரை 72 பேர் பாதிக்கப் பட்டுள்ளனர். இதனால் நாடு பெரும் அச்ச நிலைக்குள் தள்ளப் பட்டுள்ளது.

கொரோனாத் தொற்றைத் தடுப்பதற்காகத் தீவிரமான நடவடிக்கைகளில் கோட்டாபய அரசு இறங்கியிருக்கின்றது. இதன் உச்சக் கட்டமாக எதிர்வரும் திங்கட்கிழமை காலை வரை நாட்டில் ஊரடங்குச் சட்டம் பிறப் பிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் கொரோனா சந் தேகத்தில் வருவோரைக் கண் காணிப்பதற்காக தடுப்பு மையங் களும் அமைக்கப்பட்டு வருகின் றன.

இதேவேளை, இந்த கொரோனா அச்சுறுத்தல் மேலும் தொடர்ந் தால் அது தொடர்பில் எடுக்கப் படவேண்டிய நடவடிக்கைகள் குறித்து கோட்டாபய அரசு இப்போது கவனம் செலுத்தியுள்ளது.

இது குறித்து விரிவாக ஆராய் வதற்காகவே மிகவிரைவில் சர்வகட்சிக் கூட்டம் ஒன்றைக் கூட்டுவதற்கு ஜனாதிபதி கோட்டா பய ராஜபக்ஷ திட்டமிட்டுள்ளார் என அவருக்கு நெருங்கிய வட் டாரங்களில் இருந்து தெரியவந் தது.

பெரும்பாலும் அவர் அடுத்த வாரத்தில் இந்தக் கூட்டத்தைக் கூட்டுவதற்கான நடவடிக்கை களை மேற்கொள்வார் என எதிர் பார்க்கப்படுகின்றது.

அத்துடன் நாடாளுமன் றத்தை கூட்டுவது தொடர்பாக வும் இந்தச் சர்வகட்சிக் கூட்டத் தில் ஜனாதிபதி ஆராய்வார் என் றும் தெரியவருகின்றது. (ஐ)

## ஊரடங்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) என்று பொலிஸ் தலைமையகம் அறிவித்துள்ளது.

அத்தியாவசிய சேவைகள், ஊடகவியலாளர்கள், மருத்துவ சேவையாளர்கள் மற்றும் வெளி நாடுகளுக்குப் பயணமாவதற்கு விமானநிலையத்துக்குப் பயணிப் போர் வீதிகளில் பயணிக்க அனு மதிக்கப்படுவர். வெளிநாடு பய ணமாவோர் நுழைவுவிசைவு மற்றும் கடவுச்சீட்டு என்பன காண் பிக்கவேண்டும்.

ஏனையோர் வாகனத்தில் பயணித்தால் வாகனம் பொலிஸா ரால் கையகப்படுத்தப்படும். அந்த வாகனத்தின் உரிமையாளருக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக் கப்படும் என்று பொலிஸ் தலைமை யகம் குறிப்பிட்டுள்ளது. (ஐ)

## முப்படையினரைக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) படுத்த முடியாது என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று வெள் ளிக்கிழமை இடம்பெற்ற ஊடக வியலாளர்கள் சந்திப்பின்போதே அவர் இந்த விடயத்தைக் குறிப் பிட்டார்.

இதன்போது அங்கு தொடர்ந் தும் கருத்து வெளியிட்ட அவர், கடந்த 5 வருட கால ஆட்சியில் எம்மால் ஆணைக்குழுக்கள் அமைக்கப்பட்டு அவற்றுக்கு வழங்கப்பட்ட உரிமையின் கார ணமாகவே அரசியல் ரீதியான தீர்வைப் புறந்தள்ளித் தேர்தல் கள் ஆணைக்குழு தேர்தலை ஒத்திவைப்பதற்கு சுதந்திரமாக முடிவை எடுத்துள்ளது.

யுத்தத்தின்போது முப்படை யினரைக் கொண்டு பயங்கர வாதத்தை ஒழித்ததைப் போன்று அப்போதைய பாதுகாப்புச் செய லாளராக கடமையாற்றிய ஜனாதி பதி கோட்டாபய ராஜபக்ஷவின் தலைமையில் கொரோனா வைர ஸையும் கட்டுப்படுத்த முடியும் என்று எதிர்பார்ப்பது தவறாகும்.

பொதுத் தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல் நிறை வடைந்தவுடனேயே தேர்தல்கள் ஆணைக்குழு தனக்குள்ள அதி காரத்தைப் பயன்படுத்தித் தினத்தை அறிவிக்காமல் தேர் தலை ஒத்தி வைத்துள்ளது.

எனினும் ஜனாதிபதி கோட்டா பயவும் சுகாதார அமைச்சரும் தேர்தலை ஒத்தி வைக்க முடியாது என்றும் அதற்கான அவசியம் இல்லை என்றும் தெரிவித்து வந்தனர்.

அவ்வாறான அரசியல் ரீதி யான தீர்மானங்களை மீறி தேர்தல்கள் ஆணைக்குழு சுயா தீனமாக தீர்மானமெடுத்த மைக்கு நன்றி தெரிவித்துக் கொள்கின்றோம். காரணம் தற் போது தேர்தலில் வெற்றி பெறு வது முக்கியமல்ல. நாட்டைப் பாதுகாப்பதே முக்கியமாகும் - என்றார். (ஐ)

# நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி – 021 222 3000,
மின்னஞ்சல் – kalaikkathirnews@gmail.com
இணையம் – https://kalaikathir.online

## தெற்கின் சமிக்ஞை என்ன?

**கொரோனா வைரஸ் தொற்றை எதிர்கொள்வதற்காக அரசு பிரகடனப்படுத்தியுள்ள தேசிய ரீதியான ஊரடங்கு உத்தரவு இப்போது நடைமுறையில் இருக்கின்றது. அதனால் மக்களின் அசைவியக்கம் பெருமளவில் முடக்கப்பட்டுள்ளது. அதன் மூலம் கொரோனா பரம்பல் வீச்சும் – வீரியமும் – வேகமும் – குறையும் என்று நம்பலாம்.**

**ஆனால் இந்த நடைமுறை எவ்வளவு நாள்களுக்கு என்பதுதான் கேள்வி.**

**உலகளாவிய ரீதியில் பரந்து பட்டு, விசாலித்து, பரவி நிற்கும் கொரோனாவின் தாக்கத்தை எதிர்கொண்டு சமாளிப்பதற்கு இரண்டு விதமான அணுகுமுறையை அரசு கடைப்பிடிக்க வேண்டியிருக்கின்றது.**

**ஒன்று – வெளிநாடுகளில் இருந்து கொரோனா வைரஸ் தொற்று வருவதைத் தடுத்தல்.**

**அடுத்தது – உள்நாட்டுக்குள் அதன் பரவலைத் தடுத்தல்.**

**முதல் விடயத்தைக் கையாள்வதற்கு அரசு வெளிநாட்டுப் பயணிகளின் வருகையை ஒரேயடியாக முடக்கியிருக்கின்றது. அது வரவேற்கத்தக்கதே.**

**அடுத்த விவகாரத்தை நெறிப்படுத்துவதற்காக உள்நாட்டில் மக்களின் அசைவியக்கத்தைக் கட்டுப்படுத்தும் வகையில் ஊரடங்கைப் பிரகடனப்படுத்தி, மக்களின் வாழ்க்கை முறைமையையே முடக்கி, தொற்றுப் பரவலுக்கான வாய்ப்புக்களைக் குறைக்க எண்ணுகின்றது அரசு.**

**இந்த முயற்சியை ஓரிரு நாள் பேணுவதன் மூலம் அதில் வெற்றி பெறலாம் என்பது வெறும் நப்பாசைதான்.**

**ஒருவரில் தொற்றிய கொரோனா தன் கைவரிசையை– வீரியத்தை – வெளிப்படுத்த பதினான்கு நாள்கள் கூட – அதாவது இரண்டு வாரங்கள் வரைக் கூட– செல்லாம் என்பது யதார்த்த உண்மை.**

**எனவே இவ்வாறு வெளிநாட்டுப்பயணிகள் வருகையைக் கட்டுப்படுத்துதல், உள்நாட்டுக்குள் மக்கள் அசைவியக்கத்தை முடக்குதல் போன்றவற்றை ஓரிரு நாள்கள் முன்னெடுப்பதன் மூலம் பெரிதாக ஒன்றும் சாதித்து விட முடியாது. கொரோனாவின் எல்லை மீறிய பாய்ச்சலை ஒன்றிரண்டு நாள் மறித்துப் பிடிப்பது போன்றுதான் அது இருக்கும்.**

**இந்த முயற்சியில் ஓரளவுக்கேனும் கணிசமான முன்னேற்றத்தையோ, வெற்றியையோ ஈட்டுவதானால் குறைந்த பட்சம் இரண்டு வாரங்கள் முதல் ஒரு மாதம் வரையாவது இந்த முயற்சி தொடர வேண்டும். அதற்கு நாடும், மக்களும், அரசும் தயாரா என்பதே இன்றைய கேள்வியாகும்.**

**நமது தமிழ்த் தலைவர்களான விஜயகலா மகேஸ்வரன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ் மாவட்ட வேட்பாளர் குருசாமி சுரேந்திரன், ரெலோ தலைவர் செல்வம் அடைக்கலநாதன் ஆகியோர் குறிப்பிடுகின்றமை போல வடக்கின் குடும்பங்களில் எழுபது வீதமானவற்றின் குடும்பத் தலைவர்கள் அன்றாடம் காய்ச்சிகள். அன்றாடம் உழைத்து, அந்த வேதனத்தில் முழுக் குடும்பத்துக்கும் கூழோ, கஞ்சியோ ஊற்றுபவர்கள். இந்தத் திடீர் ஊரடங்கினால் அந்த அன்றாடம் காய்ச்சிகளே பேரவலப்படுகின்றார்கள்.**

**பேரச்சத்தை ஏற்படுத்தியிருக்கும் கொரோனா வைரஸ் குறித்து முன்னெச்சரிக்கையும் தீவிரப் போக்கும் காட்டும் நாம், அதற்காக விதிக்கப்படும் தேசம் தழுவிய ஊரடங்கினால் அவலப்படும் அப்பாவி மக்கள் குறித்தும் கவலைப் பட வேண்டியவர்களாக – சிந்திக்க வேண்டியவர்களாக– உள்ளோம்.**

**தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடியின் தீவிரத்தை உணர்ந்துள்ள கனடா பிரதமர் ஜஸ்ரீன் ட்ரூட்டோ அதற்காகப் பொது மக்களுக்கு ஆறுதலும், உதவியும் அளிக்கும் நிவாரணப் பொதி ஒன்றை வழங்கியிருக்கின்றார்.**

**அதேபோல நெருக்கடியை எதிர்கொண்டிருக்கும் இலங்கை மக்களுக்கு நிவாரணப் பொதி ஒன்றை வழங்கும்படி ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸ இலங்கை அரசைக் கோரியிருக்கின்றார்.**

**ஒருபுறம் ஆள்கொல்லி வைரஸான கொரோனாவை இரும்புக் கரம் கொண்டு அடக்கும் தீவிரத்தைக் காட்ட முயலும் இலங்கை அரசு. மறுபுறம் அந்தத் தீவிரப் போக்கினால் மோசமான நெருக்கடிகளை எதிர்கொள்ளப் போகும் மக்கள். அந்த மக்களுக்குத் தான் காட்ட முனையும் பரிவு யாது என்பதை சொல்லில் அன்றி செயலில் காட்டுவதற்கு அரசு முன்வர வேண்டும்.**

**இது பற்றிய தீர்மானங்களை – முடிவுகளை – ஒரு தேசமாக ஒன்றுபட்டு எடுப்பதற்காக கட்சி, இன, மத, மொழி பேதமின்றி அனைத்துத் தரப்பினரையும் ஒன்று கூட்டி மாநாடு ஒன்றை முன்னெடுக்குமாறு சஜித் பிரேமதாஸ முன்வைத்திருக்கும் கோரிக்கை மிகமிக நியாயமானது.**

**இந்தப் பேரிடரை எதிர்கொள்வதற்காக ஒன்றுபட்ட தேசமாக இலங்கை எழுவதற்கு தென்னிலங்கை அரசு காட்டப் போகும் சமிக்ஞை என்ன? பார்த்திருப்போம்.**

# சம்பந்தனைக் கூட்டமைப்பில் இணைத்த ரூபன் திருகோணமலையில் மீன் சின்னத்தில் போட்டி!



திருகோணமலை மாவட்டத்தில் தமிழ் மக்கள் தேசிய கூட்டணி சார்பில் விடுதலைப்புலிகளின் திருகோணமலை மாவட்டத்தின் அரசியல் பொறுப்பாளராகவும், தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன பொறுப்பாளராகவும் இருந்து சிறப்பாக பணியாற்றிய ஆத்மலிங்கம் ரவீந்திரா (ரூபன்) எதிர்வரும் நாடாளுமன்ற தேர்தலில் களம் இறங்குகிறார்.

விக்னேஸ்வரன் தலைமையிலான தமிழ் மக்கள் தேசிய கூட்டணி ஊடாக இவருக்கு ஆசனம் வழங்கப்பட்டுள்ளது. இறுதி யுத்தம் வரை விடுதலைப் புலிகள் அமைப்பில் இருந்து போராடி, பின்னர் இராணுவத்தினரால் அவர் கைது செய்யப்பட்டிருந்தார். 1985 ஆம் ஆண்டு விடுதலைப்புலிகள் அமைப்பில் போராளியாக இணைந்துகொண்ட ரூபன் 24 வருடங்கள் போராட்டத்துக்கு பங்களிப்பு செய்துள்ளார். விடுதலைப் புலிகளால் 1987 இல் இடைக்கால நிர்வாக சபைக்குப் பெயரிடப்பட்டிருந்தோரில் இவரும் ஒருவர். பிரேமதாஸ அரசுடனான சமாதானப் பேச்சுகளிலும் பங்குகொண்டவர்.

இரண்டாம் கட்ட ஈழப்போர் தொடங்கும் சமயத்தில் திருமலை மாவட்ட விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி மற்றும் அரசியற்றுறைப் பொறுப்பாளராக இருந்த இவர் மீது படையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் மோசமாகக் காயமடைந்தார். 13.06.1990 அன்று தம்பலகாமத்துக்கும் பாலம்போட்டாறுக்கும் இடையிலுள்ள ஜெயபுரம் என்னுமிடத்தில் இச்சம்பவம் நிகழ்ந்தது.

சந்திரிகா அரசுடனான பேச்சுக் காலத்தில் மாவட்ட மட்டத்தில் திருமலையில் நிகழ்ந்த படையினருடனான சந்திப்பில் கலந்து கொண்டார் . குச்சவெளிப் பகுதியில் 1995 ஜனவரியில் நிகழ்ந்த இச் சந்திப்பில் படையினர் தரப்பில் பின்னாளில் வடமாகாண ஆளுநராக இருந்த அப்போதைய பிரிக்கேடியர் சந்திரசிறி மற்றும் பிரிகேடியர் ஓம் பிரகாஷ் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளராகவும் விளங்கியவர். 2000 ஆம் ஆண்டுத் தேர்தலில் தமிழர் பிரதிநிதித்துவம் திருமலையில் இழக்கப்பட்டதைத் தொடர்ந்து இவரை மீண்டும் திருமலை அரசியல்துறைப் பொறுப்பாளராக நியமித்தார் தலைவர்.

இழக்கப்பட்ட தமிழரின் பிரதிநிதித்துவத்தை மீளப்பெறும் வகையில் வாக்களிப்பின் அவசியத்தை திருமலை மக்களுக்கு உணர்த்துவதே இவருக்கிடப்பட்ட முக்கிய பணி. இதனால் 2001 இல் இரா.சம்பந்தனை வரவழைத்து கட்டைபறிச்சானில் சந்தித்தார் இவர். அரசியல் பணிகள் முடுக்கிவிடப்பட்டன. 2000 ஆம் ஆண்டு தேர்தலில் 14,000 வாக்குகள் பெற்ற தமிழரின் கட்சி 2001 இல் 59,000 வாக்குகள் பெற்று மீண்டும் பிரதிநிதித்துவம் பெற்றது.

35,000 வாக்குகளைப் பெற்ற சம்பந்தன் மீண்டும் நாடாளுமன்றம் சென்றார். தேசியப் பட்டியல் உறுப்பினரான மு.சிவசிதம்பரத்தின் மறைவைத் தொடர்ந்து 2001 தேர்தலில் 28,000 வாக்குகள் பெற்றிருந்த துரைரெட்ணசிங்கம் மாஸ்டருக்கு இப்பதவியை வழங்குமாறு இவர் விடுத்த வேண்டுகோள் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

இறுதியாகத் தலைமைச் செயலகப் பணிகளில் ஈடுபடுத்தப்பட்டார். இறம்பைக்குளம், பூசா, கொழும்பு 2 ஆம் மாடி என இரு வருட தடுப்பின் பின் விடுதலையானார்.

இவரது சகோதரர்களும் விடுதலைப்புலிகள் அமைப்பில் போராளிகளாக இணைந்து பணியாற்றியுள்ளனர்.

திருகோணமலை மாவட்ட தேர்தல் களத்தில் ரூபன் களம் இறங்கியுள்ளமை தமிழ் தேசிய கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனுக்கு கடும் சவாலை ஏற்படுத்தும் என்று கருதப்படுகின்ற அதேவேளை முன்னாள் போராளிகள், மாவீரர் குடும்பங்கள், புலம்பெயர் தேசத்தை சேர்ந்தவர்கள் மத்தியில் இவருக்கான ஆதரவு தளம் அதிகரித்து வருகின்றமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.

# இத்தாலியிலிருந்து வந்ததை மறைத்த நோயாளியின் பொறுப்பற்ற செயல்!

## கொரோனா உறுதியானதால் வைத்தியர்கள் உள்ளிட்ட பலர் தனிமைப்படுத்தப்பட்டனர்

கொரோனா தொற்றுக்குள்ளான ஒருவரின் பொறுப்பற்ற தன்மை காரணமாக வைத்தியர்கள் உள்ளிட்ட வைத்தியசாலை பணியாளர்கள் 15 பேர் சுய தனிமைக்குள்ளாகியுள்ளனர்.

இது தவிர, மேலும் பல நோயாளிகளும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். ராகம பொது வைத்தியசாலையில் இந்தச் சம்பவம் நடந்தது.

சில தினங்களின் முன்னர் வயதான ஒருவர் இருமல் மற்றும் சளியால் பாதிக்கப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். அவர் உள்ளூர் வாசியெனத் தன்னைக் குறிப்பிட்டிருந்தார். இதனால் அவர், வைத்தியசாலை விடுதியில் (15ஆம் வார்ட்) அனுமதிக்கப்பட்டு சிகிச்சையளிக்கப்பட்டார்.

அவரது இரத்த மாதிரி, பொரளை வைத்திய ஆராய்ச்சி நிறுவனத்திற்கு மேலதிக பரிசோதனைக்காக அனுப்பி வைக்கப்பட்டது. அதில் அவர் கொரோனாவினால் பாதிக்கப்பட்டிருந்தமை தெரிய வந்தது. உடனடியாக அவர் தனிமைப்படுத்தப்பட்டதுடன், ஐ.டி.எச். மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார்.

அங்கு நடத்தப்பட்ட மேலதிக விசாரணையில், இத்தாலியிலிருந்து தாம் நாடு திரும்பினார் என அந்த முதியவர் தெரிவித்தார்.

அவரது பொறுப்பற்ற தன்மையால் வைத்தியசாலையின் பணியாளர்கள் 15 பேர் சுயதனிமைக்குள்ளாகியுள்ளனர் என ராகம பொது வைத்தியசாலை பணிப்பாளர் வைத்தியர் ல்டன் பெரேரா தெரிவித்துள்ளார்.

விடுதியில் அனுமதிக்கப்பட்டிருந்தபோது, விடுதியில் தங்கியிருந்த ஏனைய நோயாளிகளின் கட்டில்களுக்குச் சென்று அவர் உரையாடினார் என்றும், இத்தாலியிலிருந்து வந்ததை அவர் மறைத்ததால் வைத்தியசாலை பெரும் நெருக்கடியைச் சந்தித்து வருவதாகவும் தெரிவித்தார். அவர் வைத்தியசாலையில் 2 நாள்கள் தங்கியிருந்தார்.

அவர் இத்தாலியில் இருந்து வந்தமை தெரிந்திருந்தால், ஆரம்பத்திலேயே அவரை தனிமைப்படுத்தியிருப்போம் என பணிப்பாளர் கூறினார்.

அவருடன் நெருக்கமாக உரையாடிய நோயாளிகள் அடையாளம் காணப்பட்டுத் தனிமைப்படுத்தப்பட்டு வருகிறார்கள். கர்ப்பிணியான பெண் வைத்தியர் உள்ளிட்ட இரண்டு வைத்தியர்களும், வைத்தியசாலைப் பணியாளர்களுமாக 15 பேர் சுயதனிமைக்குள்ளாகியுள்ளனர். (ஐ)

**நாளை 22.03.2020 - ஞாயிற்றுக்கிழமை**

நட்சத்திரம்: சதயம் மு.இ 11.31 வரை
திதி : திரயோதசி மு.ப 11.38 வரை

இராகுகாலம் : 4.46 – 6.16
சுப நேரம் : 9.16 – 10.46

# ஊடரங்கு நீடிப்பது தொடர்பில் ஞாயிறன்று அறிவிக்கப்படும்

## சுற்றுலாவுக்கு முற்றாகத் தடை

கொழும்பு, மார்ச் 20

எதிர்வரும் திங்கட்கிழமை காலை 6 மணிக்கு ஊரடங்கு சட்டம் நீக்கப்பட்டதன் பின்னர் மீண்டும் அதனை நடைமுறைப்படுத்துவது குறித்து நாளை ஞாயிற்றுக்கிழமை மக்களுக்கு அறிவிக்கப்படும் என்று ஜனாதிபதி செயலகம் அறிவித்துள்ளது.

கொரோனா வைரஸை கட்டுப்படுத்தும் மற்றுமொரு நடவடிக்கையாக சுற்றுப் பயணங்கள், யாத்திரைகளை முற்றாகத் தடை செய்யத் தீர்மானித்துள்ளதாகவும் செயலகம் குறிப்பிட்டுள்ளது.

இது தொடர்பில் ஜனாதிபதி செயலகம் அனுப்பி வைத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

நாட்டில் உருவாகியுள்ள நிலமைகளுக்கு மத்தியில் மக்களை பாதுகாக்கும் வகையில் இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மக்கள் நடமாடும் இடங்களில் சுமார் ஒரு மீற்றர் தூரத்தில் தனிநபர் இடைவெளியைப் பேணுமாறு வழங்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களை கட்டாயம் பேணுமாறு அரசு கேட்டுக்கொண்டுள்ளது.

பேருந்து மற்றும் ரயில் சேவை நடைமுறையில் உள்ள சந்தர்ப்பங்களில் இந்த நடைமுறையைப் பின்பற்றுமாறும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

சமூக இடைவெளியைப் பேணுவதற்காக பஸ்களிலும் ரயில்களிலும் பயணிகள் பயணம் செய்வதற்கான எண்ணிக்கையில் அரைவாசி எண்ணிக்கையானோர் மட்டுமே பயணிக்க முடியும்.

அத்தியாவசிய உணவுப் பொருள்கள் மற்றும் ஏனைய பொருள்களை சதொச கூட்டுறவு மொத்த விற்பனை நிலையம் உள்ளிட்ட விற்பனை நிலையங்களுக்கு போதுமானளவு அரசு விநியோகித்துள்ளது.

மக்கள் அசௌகரியத்திற்குள்ளாகாத வகையில் அவற்றை விநியோகிக்குமாறு அந்த விற்பனை நிலையங்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது – என்றுள்ளது. (ஐ)

## புறக்கோட்டைப் பகுதியை தனிமைப்படுத்த நடவடிக்கை

கொழும்பு, புறக்கோட்டையில் மொத்த விற்பனை நிலையங்கள் அமைந்துள்ள பகுதியைத் தனிமை ப்படுத்த அரசு தீர்மானித்துள்ளது.

இதற்கமைய நேற்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்குப் பின்னர் அந்தப் பகுதி தனிமைப்படுத்தப்படவுள்ளதாக அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டதன் பின்னர் புறக்கோட்டையில் அமைந்துள்ள அனைத்து மொத்த விற்பனை நிலையங்களும் மீண்டும் திறக்கப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, நாட்டில் அத்தியாவசியப் பொருள்களுக்கு தட்டுப்பாடு ஏற்படாது எனவும் அமைச்சர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## அதிவேக நெடுஞ்சாலைகள் நேற்று மலை மூடப்பட்டன

கொழும்பு, மார்ச் 21

நாட்டின் அனைத்து அதிவேக நெடுஞ்சாலைகளும் நேற்று மாலை நான்கு மணியுடன் மூடப்பட்டன.

அதேவேளை சுற்றுலாப் பயணங்கள், யாத்திரைகள் என்பவற்றை மேற்கொள்வதற்கும் அரசு தடை விதித்துள்ளது .

அரச பத்திரிகை லேக் ஹவுஸ் நிறுவனமும் மூடப்படுவதால் அந்த நிறுவனத்தின் வார இறுதிப் பத்திரிகைகள் வெளிவராதென அறியமுடிந்தது. (ஐ)

# கொரோனா குறித்து விழிப்புணர்வை கூட்டமைப்பு மேற்கொள்ளவேண்டும்!

## செல்வம் அடைக்கலநாதன் அவசர வேண்டுகோள்



கொழும்பு, மார்ச் 21

மக்களை கொரோனா வைரஸ் தொற்றில் இருந்து பாதுகாக்க விழிர்ப்புணர்வு நடவடிக்கைகளை தமிழ் தேசியக் கூட்டமைப்பு மேற்கொள்ள வேண்டும் என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளர்கள் மற்றும் தொண்டர்களிடம் அவர் இந்த அவசர வேண்டுகோளை நேற்று வெள்ளிக்கிழமை விடுத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் கூறுகையில் –

நாடாளுமன்றத் தேர்தலுக்கான வேட்புமனுத் தாக்கல் செய்துள்ள நிலையில் தற்போது எமது முக்கிய நோக்கமாக கொரோனா வைரஸ் தொற்றைக் கட்டுப்படுத்தி மக்களை காப்பாற்றுவதற்கான பொறுப்பும் கடமையும் இருக்கிறது.

இதன் அடிப்படையில் தேர்தல் பிற்போடப்பட்டுள்ளமையினால் எங்கள் தேர்தல் பரப்புரைக்குப் பதிலாக கொரோனா வைரஸ் தாக்கத்தில் இருந்து மக்களைப் பாதுகாக்கும் நோக்குடன் மக்களுக்கு விழிர்ப்புணர்வை ஏற்படுத்துகின்ற செயற்பாட்டை மேற்கொள்ள வேண்டும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினராகிய நாங்கள் எமது மக்களின் அனைத்து விடயங்களிலும் கவனம் செலுத்துகின்றவர்களாக இருக்கின்றோம். அந்த வகையிலே இந்த விடயத்திலும் நாங்கள் எங்களுடைய கடமைகளைச் சரியாகச் செய்ய வேண்டும்.

அவசரநிலைப் பிரகடனத்தில் எப்படிச் செயற்பட வேண்டுமோ அவ்வாறான நிலையைப் பின்பற்றி கிராம ரீதியாக எங்களுடைய மக்களுக்கு விழிர்ப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். அந்தவகையில் தேர்தல் பிரசார வியூகங்களை மாற்றி கொரோனா வைரஸ் தொற்றில் இருந்து விடுதலை பெற்றுக் கொள்வதற்கான வாய்ப்பை ஏற்படுத்துவதற்கான செயற்பாட்டை தமிழ் தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளர்களும் தொண்டர்களும் முன்னெடுக்க வேண்டும்.

தேர்தல் பிரசாரங்களை ஒதுக்கிவிட்டு மக்கள் மத்தியில் கொரோனா வைரஸில் இருந்து பாதுகாப்பது தொடர்பான விழிர்ப்புணர்வு நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டும்.

மேலும் நாட்டில் தற்போது அவசர நிலை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. அத்தியாவசிய உணவுப் பொருள்கள் சிலவற்றிற்கு விலை குறைக்கப்பட்டுள்ளது. ஆனால் அன்றாடம் உழைத்து குடும்பங்களை வழி நடத்துகின்றவர்கள் இதனால் சரியான பலனை அடையவில்லை. இவ்விடயத்தில் ஜனாதிபதி கவனம் செலுத்த வேண்டும்.

அன்றாடம் உழைக்கின்ற அல்லது சமூர்த்திப் பயனாளிகள் மற்றும் வறுமைக்கோட்டிற்கு உட்பட்ட மக்களுக்கு இச்சலுகைகள் போய்ச்சேர வேண்டும். தற்போதைய சூழ்நிலையில் தொழில் நடவடிக்கைகளும் தடைப்பட்டுள்ளது. அவர்கள் அன்றாடம் தமது குடும்ப செலவீனங்களை முன்னெடுத்துச் செல்ல பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வருகின்றனர் – என்றார். (ஐ)

## புகைபிடித்தல், மதுப் பாவனையை தற்காலிகமாக நிறுத்த கோரிக்கை

கொழும்பு, மார்ச் 21

புகைபிடித்தல் மற்றும் மதுபாவனை யால் கொரோனா வைரஸ் தாக்கம் அதிகரிக்கும் சாத்தியம் இருப்பதால் புகைப்பிடித் தலை தற்காலிகமாகத் தடை செய்தும் மது பானச்சாலைகளை தற்காலிகமாக மூடிவிடவும் நடவடிக்கை எடுக்குமாறு அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் ஜனாதிபதியிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இதேவேளை, அதிவேக நெடுஞ் சாலைகள் நான்கு மணிக்கு மூடப்படுமெனச் சொல்லப்பட்டாலும் அது மாலை 6 மணிக்கே மூடப்படுமென இப்போது அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)



“இலங்கை சுகாதார அமைச்சு நடத்திய போட்டியில் யாழ் மாவட்டத்தில் சிறந்த சுகாதாரமான முன்மாதிரிப் பாடசாலையாக கொக்குவில் இராமகிருஷ்ண வித்தியாசாலை தெரிவு செய்யப்பட்டுள்ளது. இதற்கான சான்றிதழ்களையும் பரிசுத் தொகையையும் வித்தியாசாலை அதிபர் கு.திலீபனிடம் வைத்தியர் தவநேசன் வழுங்குகின்றமையை படத்தில் காணலாம்...

SRI MURUGAN
COMMUNICATION & AGENCY POST OFFICE
உலகெங்குமிருந்து
உறவுகளிடமிருந்து அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக் கொள்ள இவையனைத்தையும் ஒரே கூரையின் கீழ்; அதிவிரைவு பாதுகாப்பு நம்பகத் தன்மை.
உறவுகளுக்கு தபால்கள் பொதிகள் சேவை உடனுக்குடன் அனுப்ப
WESTERN UNION WU
மூலமாக அனுப்பப்படும் பணத்தை பாதுகாப்பாக எம்மிடம் பெற்று பயணப் பையினை பரிசாக வெல்லுங்கள்.
No.303, K.K.S Road, Jaffna SriLanka Tel : 021 222 2670 / 5392
Email : SriMurugan09@gmail.com Fax:021 222 3214
Srimurugan303@gmail.com

# மத்தியபிரதேசதில் காங். அரசு கவிழ்ப்பு அரியணை ஏறுகின்றது பாரதீய ஜனதா!

## நம்பிக்கை வாக்கெடுப்புக்கு முன் முதல்வர் கமல்நாத் ராஜினாமா

போபால்.மார்ச்.21

மத்திய பிரதேச முதல்வர் கமல்நாத், தனது மாநில அரசாங்கம் பெரும்பான்மையை இழந்துள்ள நிலையில், நம்பிக்கை வாக்கெடுப்பை எதிர்கொள்வதற்கு முன்பாகவே ராஜினாமா செய்வதாக நேற்று அறிவித்தார்.

மத்திய பிரதேசத்தில் ஆளும் காங்கிரஸ் கட்சியில் இருந்து ஜோதிராதித்ய சிந்தியா வெளியேறி பா.ஜ.கவில் இணைந்தார். அவரது ஆதரவு எம்.எல்.ஏக்கள் 22 பேரும் ராஜினாமா செய்தனர். அவர்களில் முதலில் 6 மந்திரிகளின் ராஜினாமாவை மட்டும் சபாநாயகர் ஏற்றார். மற்றவர்களின் ராஜினாமா கடிதங்களைத் தாம் ஏற்றார் என நேற்று முன்தினம் நள்ளிரவில் அறிவித்தார். இதனால் கமல்நாத் தலைமையிலான அரசு சட்டசபையில் பெரும்பான்மைய இழந்தது.

சட்டசபையில் நேற்று மாலை 5 மணிக்குள் அரசு மீதான நம்பிக்கை வாக்கெடுப்பை நடத்தி முடிக்க வேண்டும் என உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டிருந்த நிலையில் நேற்று நம்பிக்கை வாக்கெடுப்பை நடத்தினால் நிச்சயம் அரசு தோல்வியடையும் என்ற நிலை



இருந்தது.

இந்த பரபரப்பான சூழ்நிலையில், கமல்நாத் வீட்டில் காங்கிரஸ் சட்டமன்ற குழு கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு பிறகு கமல் நாத் செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது அவர் கூறியதாவது:-

நாங்கள் ஐந்து ஆண்டு காலம் ஆட்சி செய்வதற்காக மக்கள் எங்களுக்கு வாய்ப்பு வழங்கினர். தற்போது ஆட்சி 15 மாதங்களை மட்டுமே கடந்துள்ளது. இந்த காலகட்டத்தில் மாநில வளர்ச்சியில் மட்டுமே நான் கவனம் செலுத்தினேன்.

பா.ஜ.க. எப்போதும் எனக்கு எதிராக சதி செய்து கொண்டே இருந்தது. எங்கள் 22 எம்.எல்.ஏக்களை அவர்கள் பெங்களூருவில் பிடித்து வைத்திருந்தனர். மக்களின் விருப்பத்திற்கு மாறாக சென்றவர்களை மக்கள் ஒருபோதும் மன்னிக்க மாட்டார்கள். இந்த நம்பிக்கை மீறல், எனக்கு எதிரானது அல்ல, மத்திய பிரதேச மக்களுக்கு எதிரானது.

மத்திய பிரதேசத்தில் உள்ள மாபியாக்கள் மீது நடவடிக்கை எடுப்பதை பா.ஜ.க. விரும்பவில்லை. பா.ஜ.க. மத்திய பிரதேச மக்களுக்கு துரோகம் இழைத்துவிட்டது. இத்தகைய சூழ்நிலையில் நான் முதலமைச்சர் பதவியில் நீடிக்க விரும்பவில்லை. பதவியை ராஜினாமா செய்கிறேன். பிற்பகலில் ஆளுநரை சந்தித்து ராஜினாமா கடிதம் கொடுக்க உள்ளேன். - இவ்வாறு அவர் கூறினார்.

கமல்நாத் தலைமையிலான மந்திரிசபை பதவி விலகியதும், 107 எம்.எல்.ஏக்களைக் கொண்டுள்ள பா.ஜ.க. ஆட்சியமைக்க வாய்ப்பு உள்ளது.

## குற்றவாளிகள் தூக்கிடப்பட்டதை கொண்டாடி வருகின்றனர் மக்கள்



இந்தியாவையே உலக்கிய கூட்டு பாலியல் வன்புணர்வுக் கொலையான நிர்பயா வழக்கில் குற்றவாளிகளுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டமையை பொதுமக்கள் பலரும் கொண்டாடி வருகின்றனர்.

இது தனது மகளுக்கு மட்டுமல்ல நாடு முழுவதும் உள்ள பெண்களுக்கு நீதி கிடைத்துள்ளதாக நிர்பயாவின் தாயார் கூறிய நிலையில் நாடு முழுவதும் தண்டனை நிறைவேற்றத்திற்குப் பலரும் ஆதரவு தெரிவித்துள்ளனர்.

அதேநேரம் இது ஏற்புடைய தண்டனை அல்ல என்று மனித உரிமைகள் ஆர்வலர்கள் கண்டித்தும் வருகின்றனர்.

தலைநகர் புதுடில்லியில் உள்ள திஹார் சிறையில் இன்று அதிகாலை 5.30 மணிக்கு குற்றவாளிகள் நால்வருக்கும் மரண தண்டனை நிறைவேற்றப்பட்டது. இறக்கும் வரை அவர்கள் நால்வரும் தூக்கில் போடப்பட்டார்கள்.

தண்டனை நிறைவேற்றப்பட்டது குறித்து அறிவித்ததும் சிறையின் வெளியே கூடியிருந்த கூட்டத்தினர் மகிழ்ச்சி ஆரவாரம் எழுப்பினர். நீதித் துறைக்குப் பாராட்டுத் தெரிவித்தனர்.

வேறு சில இடங்களிலும் மக்கள் இதனை உற்சாகமாக கொண்டினர். உத்தர பிரதேச மாநிலம் பாலியா மாவட்டத்தில் உள்ள ஒரு கிராமத்தில் மேளதாளம் முழங்க ஆடிப்பாடி உற்சாகமாக கொண்டாடினர்.

## நிர்பயா கொலையாளிகள் 4 பேருக்கும் மரண தண்டனை இன்று நிறைவேறியது



புதுடில்லி, மார்ச் 21

புதுடில்லியில் மாணவி நிர்பயாவை ஓடும் பேருந்தில் வைத்துக் கூட்டுப் பாலியல் வல்லுறவு கொண்ட 6 பேரில் நால்வருக்கு நேற்று வெள்ளிக்கிழமை அதிகாலையில் மரண தண்டனை நிறைவேற்றப்பட்டது.

அக்சய் தாக்கூர், வினய் சர்மா, பவன் குப்தா, முகேஷ் சிங் ஆகிய நால்வரும் திஹார் சிறையில் இறக்கும் வரையில் தூக்கிலிடப்பட்டனர்.

2015ஆம் ஆண்டுக்குப் பின்னர் இந்தியாவில் மரண தண்டனை நிறைவேற்றப்பட்டிருப்பது நிர்பயா வழக்கில் மட்டுமே.

23 வயதான இணை மருத்துவத் துறை மாணவியான நிர்பயா (அச்சமற்றவள்) தலைநகர் புதுடில்லியில் ஓடும் பேருந்து ஒன்றில் வைத்து கூட்டுப் பாலியல் வன்புணர்வுக்கு உள்ளாக்கப்பட்டார்.

இதனால் ஏற்பட்ட காயங்களால் மறுநாள் அவர் சிகிச்சை பயனின்றி உயிரிழந்தார். இந்தியா முழுவதும் பெரும் அதிர்ச்சி அலையைக் கிளப்பியது இந் தச் சம்பவம்.

இந்தப் பாலியல் வன்புணர்வு மற்றும் கொலை தொடர்பில் 6 பேரைப் பொலிஸார் கைது செய்தனர். அவர்களில் ஒருவ ரான ராம் சிங் 2013 மார்ச் மாதம் சிறையிலேயே இறந்துபோனார்.

மற்றொரு குற்றவாளி குற்றம் நிகழ்ந்த போது 17 வயதுச் சிறுவன் என்ற அடிப்படையில் மூன்று வருடங்கள் சீர்திருத்தப் பள்ளியில் அடைக்கப்பட்ட பின்னர் 2015ஆம் ஆண்டு விடுவிக்கப்பட்டான்.

குற்றவாளிகள் நால்வரும் கடந்த சில மாதங்களாகத் தமது தண்டனையை ஆயுள் சிறையாகக் குறைக்கும்படி கேட்டு உச்ச நீதிமன்றத்தில் மனுக்களைத் தாக்கல் செய்திருந்தனர். நீதிமன்றம் அவற்றை நிராகரித்துவிட்டது. அதைத் தொடர்ந்து ஜனாதிபதியிடம் கருணை மனுக்களையும் முன்வைத்தனர்.

அவை யும் நிராகரிக்கப்பட்டமையைத் தொடர்ந்து மார்ச் 20ஆம் திகதி மரண தண்டனைக்கு நாள் குறிக்கப்பட்டது.நேற்று மரண தண்டனை விதிக்கப்பட்டது.

## 4 வாரங்களுக்கு நகரங்களை மூட சிதம்பரம் கருத்து

புதுடில்லி, மார்ச் 20

கொரோனா வைரஸ் நோய் பரவுவதை கட்டுப்படுத்துவதற்காக இந்தியாவில் உள்ள அனைத்து நகரங்களையும், சிறுநகரங்களையும் மூடவேண்டும் என்று முன்னாள் மத்திய அமைச்சரும், காங்கிரஸ் தலைவருமான ப.சிதம்பரம் வலியுறுத்தி உள்ளார். இது தொடர்பாக அவர் டுவிட்டரில் கருத்து வெளியிட்டார்.

இந்திய மருத்துவ ஆராய்ச்சி கழகம் (ஐ.சி.எம்.ஆர்.) நடத்தியுள்ள ஆய்வு முடிவு, சமூக ரீதியில் கொரோனா வைரஸ் பரவும் மூன்றாம் படி நிலையை இதுவரை அடையவில்லை எனக் காட்டுகிறது.

எனவே 2ஆம் படிநிலையில் இந்த நோய் பரவுவதை கட்டுப்படுத்தத் தற்காலிகமாக மூடல்களை அறிவிக்க வேண்டிய நேரம் இது. பல மாநிலங்கள், மத்திய அரசை முந்திக்கொண்டு சிறுநகரங்களையும், நகரங்களையும் மூடி முடக்கி வருகின்றன என கூறி உள்ளார்.

மேலும், உலக சுகாதார நிறுவனத்தின் தலைமை இயக்குனர் அறிக்கை வெளியிட்டுள்ள நிலையில், நமது சிறுநகரங்களையும், நகரங்களையும் 2 முதல் 4 வார காலத்துக்கு மூடுவதற்கு உத்தரவிட அரசு தயங்கக்கூடாது எனவும் கூறி உள்ளார்.

## மாஸ்க் தயாரிப்பு மூலப்பொருள் ஏற்றுமதிக்கு இந்திய அரசு தடை

வளியை வடிகட்டும் முக மாஸ்க், வெண்டிலேட்டர்களின் தயாரிப்பதற்குப் பயன்படுத்தப்படும் மூலப் பொருள்களின் ஏற்றுமதிக்கு இந்திய மத்திய அரசு தடை விதித்தள்ளது.

உலகம் முழுவதையும் அச்சுறுத்திக் கொண்டிருக்கும் கொரோனா வைரஸால் 10 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர். மேலும் மக்கள் தங்களைக் காத்துகொள்ளும்படி பிரதமர் மோடி நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரையில் குறிப்பிட்டிருந்தார்.

இந்த நிலையில் இந்திய மத்திய அரசு மாஸ்க், வெண்டிலேட்டர்கள், மாஸ்க் தயாரிப்பதற்கான மூலப்பொருள்கள் ஏற்றுமதிக்கு தடை விதித்துள்ளது. இந்த தடை உத்தரவு உடனடியாக நடைமுறைக்கு வருவதாகவும் தெரிவித்து உள்ளது.

# ஆட்சியைத் தக்கவைக்க நெத்தன்யாகு கொரோனாவைப் பயன்படுத்துகிறார்

## இஸ்ரேலிய எதிர்க் கட்சிகள் கடும் குற்றச்சாட்டு

ஜெருசலேம், மார்ச் 21

மேற்காசிய நாடான இஸ்ரேலில், 'கொரோனா' வைரஸ் பரவுவதைத் தடுக்கப் பல புதிய கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன. இதையடுத்து, 'தன் ஆட்சியை தக்க வைத்துக்கொள்ள, பிரதமர், பெஞ்சமின் நெதன்யாகு, கொரோனாவை ஒரு காரணமாக பயன்படுத்துகிறார்' என, எதிர்க்கட்சிகள் விமர்சித்துள்ளன.

இஸ்ரேலில், கடந்த ஓர் ஆண்டில், மூன்று முறை தேர்தல் நடந்துள்ளது. கடைசியாக நடந்த தேர்தலிலும், எந்தக் கட்சிக்கும் பெரும்பான்மை கிடைக்க வில்லை.

நாடாளுமன்றத்தில் மொத்தமுள்ள 120 ஆசனங்களில் அரைவாசிக்குச் சற்று அதிகமாக 61 நாடாளுமன்ற உறுப்பினர்கள், முன்னாள் இராணுவத் தளபதியான, நீலமும் வெள்ளையும் கட்சித் தலைவர் பென்னி கான்ட்ஸ் பிரதமராக ஆதரவு தெரிவித்துள்ளனர்.

இதையடுத்து, அவரை ஆட்சி அமைக்கும்படி, அந்நாட்டு அதிபர், ரேவான் ரிவ்லின் அழைப்பு விடுத்துள்ளார்.

இந்த நிலையில், கொரோனா விவகாரம் மேற்கிளம்பியது. இஸ்ரேலில், 400 பேருக்கு, கொரோனா வைரஸ் தொற்று உறுதியாகிஉள்ளது. ஒரேநாளில், 100 பேருக்கு வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டதையடுத்து, பிரதமர், பெஞ்சமின் நெதன்யாகு பல்வேறு கட்டுப்பாடுகளை விதித்துள்ளார்.

மக்கள் வீடுகளிலேயே முடங்கியிருக்க வேண்டும், வெளிநாடுகளில் இருந்து வருவதற்கு தடை எனப் பல உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.மேலும், நாடாளுமன்றமும் முடக்கி வைக்கப்பட்டுள்ளது.

"தன் மீதான ஊழல் புகார் குறித்த விசாரணையை முடக்கவும், ஆட்சியை தக்க வைக்கவும், நெதன்யாகு முயற்சித்து வருகிறார். அதற்காகவே, கொரோனாவைக் காரணம் காட்டி பல கட்டுப்பாடுகளை விதித்துள்ளார்.

நாட்டு மக்களின், அலைபேசிகளைக் கண்காணிக்கவும் அவர் உத்தரவிட்டுள்ளார். ஆட்சியில் இருந்து தன்னை வெளியேற்றும் நடவடிக்கை எடுக்கப்படாமல் இருக்க, நாடாளுமன்றத்தையும் அவர் முடக்கி வைத்துள்ளார். ஜனநாயகத்தின் மாண்பை அவர் குலைத்துள்ளார்" இவ்வாறு எதிர்க் கட்சிகள் குற்றஞ்சாட்டுகின்றன.

# மார்ச் 31 வரை உள்முடக்கம் ஆர்ஜென்ரீனாவில் அறிவிப்பு

பியூனஸ் அயர்ஸ், மார்ச் 20

கொரோனா பரவி உள்ள அர்ஜென்டினா நாட்டில் அனைத்து மக்களும் இந்த மாதம் 31ஆம் திகதி வரை தங்களைத் தனிமைப்படுத்திக்கொள்ளவேண்டும் என உத்தரவிடப்பட்டுள்ளது. இந்த உத்தரவு உடனடியாக நடைமுறைக்கு வந்துள்ளது.

"நள்ளிரவு முதல் மக்கள் அனைவரும் தடுப்பு மற்றும் சமூக தனிமையில் இருக்கவேண்டும். யாரும் வீட்டை விட்டு வெளியேறவேண்டாம். இந்த நடவடிக்கை மார்ச் 31 வரை இருக்கும்" என அதிபர் ஆல்பர்டோ பெர்னாண்டஸ் அறிவித்துள்ளார்.

"இந்த நடைமுறையை பாதுகாப்புத் துறையினர் கண்காணித்து உறுதி செய்வார்கள். உணவு, மருந்து உள்ளிட்ட அத்தியாவசிய பொருட்கள் வாங்குவதற்கு மட்டும் மக்கள் வெளியே செல்லலாம். ஆனால், யாராக இருந்தாலும் வீட்டை விட்டு வெளியேறினால் அதற்கான காரணத்தை பாதுகாப்பு படையினரிடம் தெரிவிக்கவேண்டும்" எனவும் அதிபர் குறிப்பிட்டுள்ளார்.

அர்ஜென்டினாவில் இதுவரை 128 பேருக்கு கொரோனா பாதிப்பு உறுதி செய்யப்பட்டுள்ளது. 3 பேர் உயிரிழந்துள்ளனர். கொரோனா தடுப்பு நடவடிக்கையின் ஒரு பகுதியாக ஏனைய நாட்டு மக்கள் நுழையாதபடி 15 நாட்களுக்கு ஆர்ஜென்ரீனாவின் எல்லைகள் மூடப்பட்டுள்ளன.

கொரோனா பாதிக்கப்பட்ட நாடுகளில் இருந்து வரும் விமானங்களுக்கு 30 நாட்கள் தடை விதிக்கப்பட்டுள்ளது.

# பழனி முருகன் கோவிலில் சீனப் பெண்ணால் பரபரப்பு

சென்னை, மார்ச் 21

தமிழகம் பழனி முருகன் கோவிலில் சீனப் பெண் ஒருவர் திடீரென சத்தியாக்கிரகப் போராட்டத்தில் குதித்ததமையால் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

உலகை உலுக்கிவரும் கொரோனா சீனாவிலேயே கண்டறியப்பட்ட நிலையில் சீனர்கள் அச்சத்துடனேயே பார்க்கப்பட்டுவரும் நிலையில் கோயிலுக்குள் செல்வதற்கு தனக்கு அனுமதி மறுக்கப்பட்டதை எதிர்த்தே சீனப் பெண் போராட்டத்தில் குதித்தார்.

கொரோனா அச்சம் காரணமாக அனைவரையும் 'தெர்மல் ஸ்கேனர் 'வைத்து பரிசோதனை செய்த பிறகு பழனி முருகன் கோயிலுக்குள்ளே அனுமதித்து வந்தனர்.

காய்ச்சல், சளி, இருமல் போன்ற அறிகுறிகள் உள்ளவர்கள் கோவிலுக்குள் நுழைய விடாது தடுக்கப்பட்டனர். புதன்கிழமை சீனாவைச் சேர்ந்த சோசோன் (வயது35) என்பவர் பழனி கோவிலுக்கு தரிசனம் செய்ய வந்தார். அவருடன் வந்த அவரது தோழி அஸ்வினி(29) என்பவரை மட்டும் கோவிலுக்குள் தரிசனம் செய்ய அதிகாரிகள் அனுமதித்தனர்.

தனக்கு அனுமதி மறுக்கப்பட்டதைக் கண்டித்து பழனி கிரி வீதியில் மின் இழுவை ரயில் நிலையம் அருகே திடீரெனத் தரையில் அமர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டார் சோசோன். அங்கிருந்த ஊழியர்கள் அவரை அப்புறப்படுத்த முயன்றபோது அவர்களுடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டார்.

அஸ்வினி சாமி தரிசனம் செய்து கீழே இறங்கி வந்த பின்னர் இருவரும் அந்த இடத்தைவிட்டுச் சென்றுவிட்டனர்.

இதுகுறித்து அதிகாரிகள் விசாரணை நடத்திய அதிகாரிகள் சோசோன் விசா முடிந்த பின்னரும் இந்தியாவில் தங்கியிருக்கிறார் என்று தெரிவித்தனர். கோவையில் உள்ள யோகா மையத்தில் அவர் பணியாற்றுகிறார் என்றும் கூறினர். விசா நீடிப்புக்கு அவர் விண்ணப்பிக்காது இருந்தால் அவரை நாட்டைவிட்டு வெளியேற்ற நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

# உண்மையை சீனா மறைக்காதிருந்திருந்தால் கொரோனாவைக் கட்டுப்படுத்தியிப்போம்!

## அமெரிக்க அதிபர் ட்ரம் மீண்டும் சர்ச்சைக்குரிய கருத்து

வோஷிங்டன், மார்ச் 21

உலகத்தையே ஆட்டம் காண வைத்திருக்கும் கொரோனா வைரஸ் குறித்த தகவல்களை சீனா மறைக்காமல் முன்கூட்டியே தெரிவித்திருந்தால் அதனை வுகான் நகரத்திலேயே கட்டுப்படுத்தியிருக்க முடியும்; உலகம் இவ்வளவு பெரிய அச்சுறுத்தலை எதிர்கொண்டிருக்கத் தேவையில்லை.

– இவ்வாறு தெரிவித்தார் அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப். வெள்ளை மாளிகையில் செய்தியாளர்களைச் சந்தித்த அவர், கொரோனா வைரஸ் மற்றும் அதனால் ஏற்பட்ட பாதிப்புக்கள் குறித்த உண்மையைச் சீனா மறைக்கின்றது என்று குற்றஞ்சாட்டினார்.

சீனாவின் ஹூபேய் மாகாணம் வுகான் நகரில் கடந்த செம்பர் மாதம் முதன் முதலில் கண்டுபிடிக்கப்பட்டது கொரோனா வைரஸ். அதன் பின்னர் மெல்ல மெல்ல உலக நாடுகளில் அனேகமானவற்றுக்கு அது பரவியது.

இப்போது சீனாவைவிட ஐரோப்பிய நாடுகளே இந்த நோயின் தாக்கத்தால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன. மொத்த ஐரோப்பிய நாடுகளும் முழு முடக்கத்துக்குள் சிக்கும் நிலை ஏற்பட்டிருக்கின்றது.

இந்த கொரோனா வைரஸ் தொடர்பாக அமெரிக்காவுக்கும் சீனாவுக்கும் இடையே கருத்து மோதல் தொடர்ந்து நிலவி வருகிறது.

அமெரிக்க அதிபர் கடந்த சில நாள்களாக கொரோனா வைரசை 'சீனா வைரஸ்' என மேற்கொள் காட்டி பேசி வருகிறார். இது சீனாவுக்கு எரிச்சலை ஊட்டியுள்ளதுடன், அமெரிக்காவிலேயே பலரது கண்டனத்துக்கும் உள்ளாகியது.

ட்ரம்பின் கருத்துக்குப் பதிலாக அமெரிக்க ராணுவம் தான் வுகான் நகரில் இந்த வைரஸை பரவவிட்டதாக சீனா குற்றஞ்சாட்டிவருகிறது. இப்போது சீனா உண்மைகளை மறைக்கிறது என்கிற சர்ச்சைக்குரிய கருத்தை அமெரிக்க அதிபர் மீண்டும் தெரிவித்திருக்கிறார்.



"இந்த வைரஸ் தொடர்பான விவரங்கள் சில மாதங்களுக்கு முன்னதாகவே தெரிந்திருந்தால் வைரஸ் பரவிய பகுதியிலேயே (வுகான் நகரம்) அதனைக் கட்டுப்படுத்தி இருக்கலாம். கொரோனா வைரஸ் குறித்த விவரத்தை சீனா தெரிவிக்காததால் தற்போது உலகமே அதற்கு மிகப்பெரிய விலையை கொடுத்துக்கொண்டு இருக்கிறது.

"கொரோனா குறித்த தொடக்க நிலை அறிக்கைகளை சீனா மறைத்துள்ளது என்பது அனைவரும் அறிந்ததே. தற்போது அவர்கள் (சீனா) வெளியிடும் விவரங்களாவது உண்மையாக இருக்கும் என நம்புவோம்.

"இந்த வைரஸ் குறித்து மக்களுக்கு தெரியவந்திருந்தால் முன்னதாகவே தடுக்கப்பட்டிருக்கும்.

எங்களுக்கு வைரஸ் தொடர்பான தகவல் கிடைத்திருந்தால் சீனாவின் எப்பகுதியில் அது வந்ததோ அங்கேயே தடுத்து நிறுத்தி இருக்கலாம். ஆனால் தற்போது இந்த கொடிய வைரஸால் உலகமே பாதிக்கப்பட்டிருக்கிறது. இந்து மிகவும் மோசமான நிலையாகும்" –என்றார் ட்ரம்.



# ஹொலிவுட் பிரபலங்களும் கொரோனாவின் பிடியில்

கொரோனா வைரஸ் உலகம் முழுவதும் பிரபலங்களையும் தாக்கி வருகிறது. ஹொலிவுட் நடிகர் டாம் ஹாங்க்ஸ், தனக்கும் தனது மனைவிக்கும் கொரோனா பாதிப்பு ஏற்பட்டு உள்ளது என்றும், இதனால் இருவரையும் தனிமைப்படுத்தி சிகிச்சை அளித்து வருகின்றனர் எனவும் ஏற்கனவே தெரிவித்து இருந்தார். ஒரு படப்பிடிப்புக்காக ஆஸ்திரேலியாவுக்கு சென்ற போது அவர்களுக்கு கொரோனா தொற்று ஏற்பட்டது.

நடிகை ஓல்கா குரிலென்கோ, நடிகர் இத்ரிஸ் எல்பா ஆகிய மேலும் 2 ஹாலிவுட் நட்சத்திரங்களையும் கொரோனா தாக்கி உள்ளது. ஓல்கா குரிலென்கோ, ஜேம்ஸ் பாண்ட் படமான குவாண்டம் ஆப் சொலாஸ், டாம்குரூஸ் நடித்த ஒபிலிவியான் உள்ளிட்ட படங்களில் நடித்து இருக்கிறார். நடிகர் இத்ரி எல்பா தோர், பசிபிக் ரிம் உள்ளிட்ட படங்களில் நடித்துள்ளார்.

இந்த நிலையில் கேம் ஒவ் த்ரோன்ஸ் தொடர் உள்ளிட்ட பல ஹொலிவுட் படங்களிலும் நடித்து பிரபலமான கிறிஸ்டோபர் ஹிவ்ஜுவும், அதே தொடரில் நடித்த நடிகை இந்திரா வர்மாவும் இப்போது கொரோனாவால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

# கொரோனா வைரஸின் அறிகுறிகள் என்ன? தொற்றில் இருந்து தற்பாதுகாப்பது எப்படி?

உலகம் முழுவதும் மிகவும் தீவிரமாக பரவி வரும் கொரோனா வைரஸ் இதுவரை 160 நாடுகளில் பரவி உள்ளது. 2 லட்சத்து 44 ஆயிரத்து 517 பேர் வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், 10,030 பேர் மரணித்துள்ளனர் என ஜான் ஹாப்கின்ஸ் பல்கலைக்கழகத்தின் சமீபத்திய தரவுகள் கூறுகின்றன.

கொரோனா வைரஸ் தாக்குதலுக்கு உள்ளாகி அதிலிருந்த மீண்டவர்களின் எண்ணிக்கை 86,025 ஆக உயர்ந்துள்ளது.

இந்தியாவில் வைரஸால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 195ஆக உயர்ந்துள்ளதாகவும் அந்த தரவுகள் தெரிவிக்கின்றன.

கொரோனா வைரஸ் என்றால் என்ன? இந்த வைரஸ் எப்படி ஒருவருக்கு பரவுகிறது? இந்த வைரஸை கட்டுப்படுத்த முடியுமா? – போன்ற பல கேள்விகளுக்கு விடையளிக்கிறது இந்த கட்டுரை.

கொரோனாவிலிருந்து நான் என்னை தற்காத்து கொள்வது எப்படி?

உங்கள் கைகளை குறைந்தது 20 நொடிகள் கழுவ வேண்டும். உங்கள் கைகளின் அனைத்து பாகங்களுக்கும் கவனம் கொடுங்கள். சோப்பு மற்றும் நீரைக் கொண்டு நன்றாக கழுவுங்கள். உங்கள் கண்கள், மூக்குகள், மற்றும் வாயை தொடுவதை தவிருங்கள் எனவே அந்த வழியில்தான் வைரஸ் உங்கள் உடம்பில் பரவும்.

கொரோனா தொற்றிலிருந்து உங்களை காத்து கொள்வது எப்படி?

நீங்கள் இருமினாலோ அல்லது தும்மினாலோ டிஷ்யூ பேப்பர்களை பயன்படுத்துங்கள். அதை மறக்காமல் குப்பையில் போட்டு கை கழுவுங்கள். கைக்குட்டைகளை காட்டிலும் ஒருமுறை மட்டுமே பயன்படுத்தப்படும் டிஷ்யூக்களை பயன்படுத்துங்கள். டிஷ்யூ பேப்பர் இல்லை என்றால் உங்கள் முழங்கை மூட்டை பயன்படுத்தி இருமுங்கள். கைப்பிடிகள், லிஃப்ட் பொத்தான்கள், போன்ற அதிகம் பேர் தொடும் பொத்தான்களை தொடுவதை தவிருங்கள். காய்ச்சல், இருமல், சுவாசக் கோளாறு போன்ற அறிகுறிகள் இருப்பவர்களிடமிருந்து தள்ளி இருங்கள். உங்களுக்கு காய்ச்சல், இருமல், சுவாசப் பிரச்சனைகள் இருந்தால் எங்கும் போகாமல் வீட்டிலேயே இருங்கள்.

உங்களுக்கு கொரோனா உள்ளது என்றால் நீங்கள் என்ன செய்ய வேண்டும்?

நீங்கள் கொரோனா தொற்று பாதிக்கப்பட்ட இடங்களுக்கு பயணம் செய்திருந்தாலோ அல்லது பயணம் செய்தவருடன் தொடர்பில் இருந்தாலோ, வீட்டிலேயே இருங்கள். குறிப்பாக உங்களுக்கு லேசாக ஏதேனும் அறிகுறி இருந்தாலோ அது சரியாகும் வரை பிறருடன் தொடர்பில் இருப்பதை தவிர்த்து விடுங்கள். மாஸ்க் (முகக்கவசம்) அணிந்து கொள்ளுங்கள்.

நீங்கள் மருத்துவரிடம் சென்றாலும் அது முழுமையாக உறுதிப்படுத்தப்படுமா என்பது தெரியவில்லை. ஏனென்றால் வைரஸ் தொற்று ஏற்பட்டு அது அறி



குறிகள் காட்டுவதற்கு 14 நாள்கள் எடுத்துக் கொள்ளும்.

உங்கள் மாநில கொரோனா உதவி எண்ணுக்குத் தொடர்பு கொள்ளுங்கள். அதன் பின் சுகாதார அதிகாரிகள் உங்களின் மாதிரிகளை சேகரிப்பர். இந்தியாவில் தற்போது 15 சோதனை ஆய்வகங்கள் உள்ளன. உங்களுக்கு தொற்று இருப்பது தெரிந்தால் நீங்கள் தனிமை வார்டில் சிகிச்சை பெறுவீர்கள்.

இந்த கோவிட் 19 முதன்முதலில் காய்ச்சலாக தொடங்கும். பின் வறட்டு இருமல். அதன்பின் ஒரு வாரம் கழித்து சுவாசக் கோளாறுகள் ஏற்படும். ஆனால் இந்த அறிகுறிகள் உள்ளவர்கள் அனைவரும் கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டவர்கள் என்று அர்த்தமில்லை. இந்த அறிகுறிகள் பிற பொதுவான வைரஸாலும் ஏற்படக்கூடியவை.

இந்த கோவிட் 19 தீவிரமாக இருந்தால், நிமோனியா, சிறுநீரக பழுது, தீவிர சுவாசப் பிரச்சினை, தீவிர நிலையில் உயிரிழப்பும் ஏற்படலாம். பொதுவாக இந்த அறிகுறிகள் சராசரியாக ஐந்து நாள்களில் தெரியலாம் என விஞ்ஞானிகள் தெரிவிக்கின்றனர்.




ஆனால் சிலருக்கு அதைக்காட்டிலும் தாமதம் ஆகலாம் என்றும் கூறப்படுகிறது.

சிலருக்கு உடல் நலக்குறைவு இருப்பது தென்படுவதற்கு முன்னரே அவர் தொற்றைப் பரப்பலாம் என்றும் கூறப்படுகிறது.

ஒருவரின் உடல் வெப்ப நிலையை தெரிந்து கொள்ள எந்தப் பகுதிகளில் தெர்மாமீட்டர் வைத்து சோதிக்கலாம்?

கொரோனா வைரஸ் அல்லது கோவிட்19 என்றால் என்ன?

கொரோனா வைரஸ்கள் ஒரு பெரிய குடும்பத்தை சேர்ந்தவை. அது மனிதர்கள் மற்றும் விலங்குகள் மத்தியில் பல நோய்களை உருவாக்கும். மனிதர்களில் இந்த கொரோனா வைரஸ் சளி முதல் சார்ஸ் வரையில் உண்டாக்கக்கூடியவை.

தற்போது உலகின் பல்வேறு நாடுகளில் அச்சுறுத்தலை ஏற்படுத்தும் இந்த தொற்றுக்கு கோவிட்19 என பெயரிட்டுள்ளனர். இந்த தொற்று சமீபமாக கண்டுபிடிக்கப்பட்ட கொரோனா வைரஸால் ஏற்படுகிறது. இது விஞ்ஞானிகளால், சிவியர் அக்யூட் ரெஸ்பிரேட்டரி சிண்ட்ரோம் கொரோனா வைரஸ் 2 அல்லது நீழிஷெவிளீலி2 என்று பெயரிடப்பட்டுள்ளது.

கொரோனா ஏற்பட்டால் இறப்பு நிச்சயமா?

கொரோனா தொற்று குறித்த அச்சம் பரவலாக இருந்தாலும், இதனால் இறப்பு ஏற்படும் விகிதம் மிகவும் குறைவே. ஒரு சதவீதத்திலிருந்து 2 சதவீதம் வரையே இறப்பு விகிதம் என கூறப்படுகிறது. ஆனால் அதை உறுதியாக கூற முடியவில்லை.

56,000 நோயாளிகளிடம் உலக சுகாதார நிறுவனம் சோதனை செய்தது. அதில் கண்டறிந்தவை: –

6% பேரின் உடல்நிலை மோசமாக உள்ளது என்றும் அவர்களுக்கு நுரையீரல் பழுது, செப்டிக் (தொற்றிலிருந்து நம்மைக் காக்க நோய் எதிர்ப்பு சக்தி, ரத்தத்தில் வெளியிடும் ரசாயனம் தவறாக நமக்கு ஆபத்தை உருவாக்கும் நிலை), உறுப்புகள் செயலிழப்பு மற்றும் இறப்பு ஏற்படும் ஆபத்து ஆகியவை தென்படுகின்றன.

14% பேருக்கு தீவிர அறிகுறிகள் காணப்படுகின்றன. சுவாசிப்பதில் சிரமம் மற்றும் நுரையீரலுக்குள் சரியாக காற்று செல்லாமை.

80% பேருக்கு மிதமான அறிகுறிகள், காய்ச்சல், இருமல் சிலருக்கு நிமோனியாவும் இருக்கலாம்.

வயதானவர்கள், ஆஸ்துமா, நீரிழிவு மற்றும் இதய நோய்கள் உள்ளவர்கள் இதனால் அதிகம் பாதிக்கப்படலாம்.

கொரோனாவை குணப்படுத்த முடியுமா?

தற்சமயம் கொரோனா தொற்றை குணப்படுத்தும் மருந்து இல்லை. இருப்பினும் ஆய்வாளர்கள் மருந்து கண்டுபிடித்து விலங்குகளில் சோதனை செய்து வருகின்றனர். அது சரியாக இருந்தால் பின் மனிதர்களிடத்தில் சோதனை செய்யப்படும். விஞ்ஞானிகள் மருந்து கண்டுபிடித்தாலும் அது அதிகளவில் உற்பத்தி செய்யப்பட வேண்டும். கோவிட் 19 வைரஸ் என்பதால் ஆண்டி பாக்டீரியல் மருந்து (பாக்டீரியாவை அழிக்கும் மருந்து) செயல்படாது.

கொரோனாவிலிருந்து உங்களை தற்காத்து கொள்வதற்கான சிறந்த வழி நன்றாக கைகளை சுத்தம் செய்வது. சோப்பையும், தண்ணீரையும் கொண்டு உங்கள் கைகளை நன்றாக சுத்தம் செய்யுங்கள்.

கொரோனா எங்கிருந்து வந்தது?

இந்த SARSC-2 வைரஸ் கடந்த டிசம்பர் மாதம் சீனாவில் உள்ள விலங்குகள் சந்தையிலிருந்து, விலங்குகளிடமிருந்து மனிதர்களுக்கு பரவியிருக்கலாம் என்று கூறப்படுகிறது. எந்த விலங்கு என்று இன்னும் கண்டறியப்படவில்லை. இருப்பினும் வௌவால்கள் மூலம் பரவியிருக்கலாம் என்று கூறப்படுகிறது.

கொரோனா தொற்று எவ்வாறு பரவுகிறது?

கொரோனா பாதிக்கப்பட்ட ஒருவர் இரும்பும்போது, அந்த வைரஸ் காற்றில் கலக்கலாம். இதை சுவாசித்தாலோ அல்லது அந்த வைரஸ் துகள்கள் பட்ட இடத்தை தொட்டு பின் கண்கள், மூக்கு அல்லது வாயை தொட்டாலோ தொற்று ஏற்படலாம்.

இருமும் போதோ அல்லது தும்மலின் போதோ டிஷ்யூ வைத்துக் கொள்ள வேண்டும். கைகளை கழுவாமல் முகத்தை தொடக்கூடாது. மேலும் தொற்று இருக்கலாம் என சந்தேகிக்கப்படும் நபர்களிடமிருந்து தள்ளி இருத்தல் வேண்டும். பாதிக்கப்பட்டவர்களின் மலத்திலிருந்து இந்த வைரஸ் தொற்று பரவ வாய்ப்பில்லை என உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது.

உலகம் முழுவதும் கொரோனா தொற்று பரவலை தடுப்பது எவ்வாறு?

உலக சுகாதார நிறுவனம் கொரோனா வைரஸை உலகளவில் பரவும் தொற்றாக அறிவித்துள்ளது.

anemic என்பது உலகம் முழுவதும் பல்வேறு நாடுகளில் ஒரே நேரத்தில் மக்களிடையே பரவும் தொற்றாகும்.

உலக சுகாதார நிறுவனத்தின் தலைவர் டெட்ரோஸ், வைரஸை தடுக்க நடவடிக்கை எடுக்காமல் இருக்கும் நிலையின் ஆபத்தை விவரிக்கவே இந்த பதம் இப்போது பயன்படுத்தப்படுகிறது எனக் கூறியுள்ளார்.


உலக சுகாதார அமைப்பின் தலைவர் டெட்ரோஸ் கூறுகையில், சில நாடுகள் கட்டுப்படுத்தும் திறன் இல்லாமலும், வளம் இல்லாமலும், பிரச்சினைகளைத் தீர்க்க முடியாமலும் போராடிக் கொண்டிருக்கின்றன என்கிறார்.

எனவே உலக சுகாதார நிறுவனம் அனைத்து நாடுகளிடமும், உடனடி சிகிச்சை தரும் முறையை உயர்த்தவும் மக்கள் தங்களைத் தாங்களே காப்பாற்றிக் கொள்ளும் முறை குறித்து அவர்களுக்கு எடுத்துரைக்கவும், கொரோனா வைரஸ் எனப்படும் கோவிட் 19 ஆல் பாதிக்கப்பட்டவர்களை கண்டறிந்து, தனிமைப்படுத்தி, சோதனைக்குள்ளாக்கி, அவர்களுக்கு சிகிச்சை வழங்கவும் எடுத்துரைப்பதாக கூறியுள்ளது.

கொரோனா தொற்றை கையாள இந்தியா தயாராக உள்ளதா?

உலகில் அதிக மக்கள் தொகையில் இரண்டாவது பெரிய நாடு, கொரோனா வைரஸ் தீவிரமாகப் பரவினால் அதைச் சமாளிக்க தயார் நிலையில் இருக்கிறதா?

ஏற்கெனவே 3,000 பேருக்கும் மேற்பட்டவர்களைக் கொன்றுவிட்ட, 60க்கும் மேற்பட்ட நாடுகளுக்குப் பரவியுள்ள சுவாச மண்டலம் தொடர்பான இந்த வைரஸ் தாக்குதல் நோயை சமாளிக்க உலகில் ஆயத்தமான முதல் வரிசை நாடுகளில் நாம் உள்ளதாக இந்தியா கூறுகிறது.




இந்த வைரஸ் பாதிப்பால் முதலாவது மரணத்தை சீன அரசு ஊடகங்கள் உறுதி செய்த ஆறு நாள்களில், உலக அளவிலான சுகாதார அவசர நிலையை உலக சுகாதார அமைப்பு (நிஃஷிநு) பிரகடனம் செய்வதற்கு இரண்டு வாரங்களுக்கு முன்பே, ஜனவரி 17 ஆம் திகதியிலிருந்தே விமான நிலையங்களில் பயணிகளுக்கு மருத்துவப் பரிசோதனை செய்யப்பட்டு வருவதாக சுகாதாரத் துறை அமைச்சர் ஹர்ஷ்வர்த்தன் கூறியுள்ளார்.

(11 ஆம் பக்கம் பார்க்க...)

# வடக்கு மக்களின் மீது அரசு அதிக கரிசனை வேண்டும்

## விஜயகலா மகேஸ்வரன் கோரிக்கை



யாழ்ப்பாணம்,மார்ச் 21

தற்போதைய அரசு வடக்கு மக்கள் மீது அதிக கரிசனை செலுத்த வேண்டுமென முன்னாள் கல்வி இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் கோரிக்கை விடுத்துள்ளார்

தற்பொழுது உலகம் முழுவதும் அச்சுறுத்தலை ஏற்படுத்தியுள்ள வைரஸின் தாக்கமானது இலங்கையிலும் படிப்படியாக அதிகரித்த வண்ணம் உள்ளது.வடக்கில் குறிப்பாக வடக்க. மாகாணத்தில் எட்டு லட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் வசித்து வருகின்றார்கள். அவர்களில் அன்றாட உழைப்பை மேற்கொண்டு வாழ்ந்துவரும் குடும்பங்களே அதிகமாகக் காணப்படுகின்றன.

இப்போது இன்றைய தினத்திலிருந்தே (வெள்ளியன்று முதல்) இரு நாள்கள் நாடுமுழுவதும் ஊரடங்குச்சட்டம் அரசாங்கதாதினால் அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் வடக்கு மக்கள் பெரிதும் பாதிக்கப்படவுள்ளார்கள். வடபகுதி மக்கள் யுத்தத்திற்கு முகம் கொடுத்து பல இன்னல்களை அனுபவித்து வறுமைக்கோட்டின்கீழ்வாழ்பவர்களாக காணப்படுகின்றார்கள். எனவே தற்போது ஆட்சியிலுள்ள அரசாங்கம் வடக்கு மக்களுக்குநிவாரணஉதவிகளைவழங்கமுன்வரவேண்டுமென விஜயகலா மகேஸ்வரன் மேலும் கோரிக்கை கோரிக்கை விடுத்துள்ளார்.

# கொடிகாமத்தில் கொரோனா தனிமைப்படுத்தல் நிலையம்

## அமைக்க மாவட்ட செயலர் கோரிக்கை

யாழ்ப்பாணம், மார்ச் 21

யாழ்ப்பாணம்மாவட்டத்துக்கான கொரோனா தனிமைப்படுத்தல் நிலையம் கொடிகாமத்தில் அமைக்கப்படவுள்ளதாக மாவட்ட செயலாளர் கணபதிப்பிள்ளை மகேசன் பாதுகாப்பு அமைச்சுக்கு அறிவித்துள்ளார்.

கொடிகாமம் 522ஆவது படை முகாமில் தனிமைப்படுத்தல் நிலையம் அமைக்கப்படவுள்ளது என்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் கொரோனா தனிமைப்படுத்தல் நிலையங்களை அமைக்கப் பாதுகாப்பு அமைச்சு – இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் அறிவித்திருந்தது.

இதற்கமையயாழ்ப்பாணம்மாவட்டத்துக்கான கொரோனா தனிமைப்படுத்தல் நிலையம் கொடிகாமம் இராணுவ முகாமில் அமைப்பதற்கு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

வெளிநாட்டிலிருந்து வந்து தங்கியிருப்போர் மற்றும் அவர்களுடன் தொடர்புடையோர் இந்த நிலையத்தில் தங்க வைக்கப்படுவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இதற்காக 50 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீடும் கோரப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# கொரோனா வைரஸ் பரவலை ஒட்டி புற்றுநோயாளருக்கு விசேட அறிவிப்பு

கொரோனா வைரஸ் பரவலை ஒட்டி இலங்கைப் புற்றுநோய் சிகிச்சை வைத்தியர் சங்கத்தினரால் புற்றுநோயாளர்களுக்கு விசேட அறிவித்தல் வழங்கப்பட்டுள்ளது.

சங்கத்தின் தலைவர் வைத்தியர் காந்தி பெரேரா, செயலாளர் வைத்தியர் டேவிந்த ஜெயத்திலகே ஆகியோர் இது தொடர்பாக ஒப்பமிட்டு அனுப்பியுள்ள அறிக்கையின் விவரம் வருமாரு: –

உலகளாவியரீதியாகப் பரவி வரும் கொரோனா (COVID-19 Virus) வைரஸ் தொற்றானது இலங்கையையும் பாதித்துள்ளது. நிர்ப்பீடன சக்தி குறைந்த புற்றுநோயாளர்களுக்கு கொரோனா வைரஸ் (COVID - 19 Virus) தாற்றேற்படும் அபாயம் அதிகமாகவுள்ளது. இவ் வைரஸ் தொற்றிற்கு நெருக்கமாகப் பழகுதலே பிரதானமான காரணம் எனப் பரவலாகக் கூறப்படுகின்றது. இவ் வைரஸ் தொற்று புற்று நோயளர்களுக்கு ஏற்படுவதைக் குறைக்க பின்வரும் ஆலோசனைகளைப் பின் பற்றவும்:–

(1) புற்றுநோய்க்கான தீவிர சிகிச்சை முடிவடைந்து கிளினிக் கவனிப்பு மற்றும் மமோகிராம், அல்ரா சவுண்ட், சி – ரி ஸ்கான் பரீட்சனை போன்றவற்றுக்காக புற்றுநோய் வைத்தியசாலைக்கு வருகை தருவதை மறு அறிவித்தல் வரை பிற்போடவும்.

(2) புற்றுநோயாளர்கள் தமக்கான மருத்துவ சிகிச்சை மற்றும் கதிர்வீச்சு சிகிச்சை முடிவுற்ற பின்பு ஓமோன் சிகிச்சைக்காக தைரொக்சின், ரமொக்சிபென் போன்ற குளிகை களை எடுப்பதற்கு பொறுப்பான ஒருவரை வைத்தியசாலைக்கு ஆவணங்களுடன் அனுப்பிப் பெற்றுக் கொள்ளவும்.

(3) புற்றுநோய்க்கான தீவிர மருத்துவ மற்றும் கதிர்வீச்சு சிகிச்சை பெற வேண்டிய நோயாளர்களுக்கான சிகிச்சை வழங்குதல் மற்றும் சில மாற்றம் ஏற்படுத்தலை உங்கள் சிறப்பு வைத்திய நிபுணர் பிரிவு தீர்மானித்து உங்களுக்கு சிகிச்சையளிப்பர்.

(4) உங்களுக்கு கொரோனா வைரஸ் (COVID - 19 Virus) தொற்று ஏற்பட்டுள்ளதென நீங்கள் சந்தேகித்தால் அதற்கான பரிசோதனை செய்வதற்காக தெரிவு செய்யப்பட்ட அண்மித்த வைத்திய சாலைக்கு சென்று ஆலோசனை பெறவும்.

இந்த அறிவுரைகள் உங்களுக்கு கொரோனா (COVID - 19 Virus) வைரஸ் தொற்று ஏற்படுவதைக் குறைப்பதற்காகவே வழங்கப்படுகின்றன. நீங்கள் இப்பிரச்சினைகள் தீர்ந்தபின் தரப்படும் புதிய தினத்தில் வைத்தியசாலைக்கு உங்கள் சிகிச்சைக்காக வருகை தரவும்.

மேலதிக தகவல் பெற விரும்புவோர் தங்கள் சிகிச்சைப் பிரிவுடன் தொடர்பு கொள்ளவும்.– என்று உள்ளது.

# மத்தள விமான நிலையத்துக்குள் புதிதாக விமானப்படையின் முகாம்

## பிரத்தியேகமாக இரு நூறு ஏக்கர் காணி சுவீகரிப்பு




மத்தள ராஜபக்ஷ விமான நிலையத்திற்குள் விமான படை முகாம் ஒன்றை ஸ்தாபிப்பதற்காக 200 ஏக்கர் காணி பெற்றுக்கொள்ளப்படவுள்ளது.

இது தொடர்பில் இவ்வார முற்பகுதியில் நடைபெற்ற வாராந்த அமைச்சரவை கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானம் பின்வருமாறு:–

01.மத்தள ராஜக்ஷ விமான நிலையத்திற்குள் (MRIA) விமான படை முகாம் ஒன்றை அமைப்பதற்காக 200 ஏக்கர் காணி பெற்றுக்கொள்ளப்படவுள்ளது.

இலங்கையில் அனைத்து விமான நிலையங்களின் பாதுகாப்பை உறுதி செய்யும் பொறுப்பு இலங்கை விமானபடைக்கு வழங்கப்பட்டுள்ளது. இதற்கு அமைவாக இந்துமா சமுத்திர வலயத்தில் மூலோபாய முக்கியத்துவத்தைக்கொண்ட விமான நிலையம் ஒன்றாக அடையாளம் காணப்பட்டுள்ள மத்தள ராஜபக்ஷ விமான நிலையத்திற்கு பாதுகாப்பு வழங்குவதற்காக கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்துக்கு சமனான விமானப் படை முகாம் ஒன்றை அமைப்பது அத்தியாவசியமாகியுள்ளது.

இதற்கு அமைவாக மகாவலி, விவசாய, நீர்ப்பாசன மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சரும் உணவு, பாதுகாப்பு மற்றும் நுகர்வோர் சேமநல அமைச்சரும் சமர்ப்பித்த பரிந்துரையைக் கவனத்தில் கொண்டு, மத்தள ராஜபக்ஷ விமான நிலையத்திற்கு அருகாமையில் 200 ஏக்கர் காணியை இதற்காக ஒதுக்கீடு செய்வதற்கு அமைச்சரவையினால் தீர்மானிக்கப்பட்டுள்ளது.




# அனைத்து ரயில் சேவைகளும் நேற்று மாலையுடன் நிறுத்தம்

கொழும்பு, மார்ச் 20

நாடு முழுவதுமான அனைத்து ரயில் சேவைகளும் நேற்று பிற்பகல் 3.30 மணி முதல் இடைநிறுத்தப்பட்டுள்ளதாக ரயில்வே திணைக்களம் அறிவித்துள்ளது.

மீண்டும் எதிர்வரும் திங்கட்கிழமைகாலை6மணிக்குஅனைத்து ரயில் சேவைகளும் ஆரம்பமாகும் என்றும் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

நாட்டில் நேற்று வெள்ளிக்கிழமை மாலை 6 மணி தொடக்கம் எதிர்வரும் திங்கட்கிழமை காலை 6 மணிவரையான 60 மணித்தியாலங்கள் ஊடரங்கு நடை முறைபடுத்தப்படுவதால் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கொரோனா வைரஸ் தொற்று பரம்பலைக் கட்டுப்படுத்த மக்களை வீடுகளில் முடக்கும் வகையில் இந்த ஊடரங்கு நடைமுறைப் படுத்தப்படுகிறது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

காலைக்கதிர்
Kalaikathir





# கொரோனாவால் உயிரிழந்த உதைபந்து பயிற்சியாளர்!

ஸ்பெயின் நாட்டின் மலகாவை தளமாகக் கொண்ட அட்லெடிகோ போர்ட்டா ஆல்டாவின் ஜூனியர் கால் பந்து அணியின் பயிற்சியாளராக பிரான் சிஸ்கோ கார்சியா (வயது - 21) என்பவர் நிர்வகித்து வந்தார்.

இவர் கடந்த சில தினங்களுக்கு முன் கடுமை யான கொரோனா வைரஸ் அறிகுறிகளுடன் வைத்தி யசாலைக்கு கொண்டு செல்லப்பட்டார்.

அங்கு அவருக்கு பல்வேறு சோதனைகள் தொடர்ந்து மேற்கொள் ளப்பட்டதில் இறுதியாக கொரோனா வைரஸின் தாக்குதல் இருப்பது உறுதி செய்யப்பட்டது. அத்தோடு அல்லாமல் அவ ருக்கு இரத்த புற்றுநோயும் இருப்பதை வைத்தியர் கள் கண்டறிந்தனர்.

இந்நிலையில் அவர் கடந்த ஞாயிற்றுக்கிழமை யன்று உயிரிழந்து விட்டார் என ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளது. கொரோனா வைரஸால் பாதிக் கப்பட்ட இளம் வயது மற்றும் மலகா பிராந்தியத் தில் இந்த வைரஸால் இறக்கும் 5ஆவது நபரா கும்.

கொரோனா வைரஸ் அறிகுறிகளுடன் வைத்தி யசாலைக்கு கொண்டு செல்லப்படும் வரை, அவர் தனக்கு புற்றுநோய் இருப்பது பற்றியும் அறிந்தி ருக்கவில்லை. முன்பே வைத்தியசாலையில் அனு மதிக்கப்பட்டிருந்தால் அவரை காப்பாற்றியிருக்க லாம் என வைத்தியர்கள் கூறியுள்ளார்கள்.

# ஆரோக்கியமாகவும் பாதுகாப்பாகவும் வீட்டில் இருங்கள்



ஒரு வீடியோ செய்தியில், விராட் கோஹ்லி மற்றும் அனுஷ்கா ஷர்மா மக்களை வீட்டில் தங்கி சுயமாக தனிமைப்படுத்திக்கொள் ளுமாறு கேட்டுக்கொண்டனர்.

விராட் கோஹ்லி மற்றும் அனுஷ்கா ஷர்மா ஆகியோர் வீட் டில் தங்க வேண்டிய அவசியம் குறித்து பேசினர்.

கொரோனா வைரஸ் அச்சுறுத் தல், உலகம் முழுவதும் இருக்கும் மக்களை பதற்றமடையச் செய் துள்ளது. வியாழக்கிழமை பிற் பகுதியில், பிரதமர் நரேந்திர மோடி, கொரோனாவுக்கு எதிரான போராட் டத்தில் ஞாயிற்றுக்கிழமை (மார்ச் 22) ஜந்தா ஊரடங்கு உத்தரவு பயிற்சி செய்யுமாறு நாட்டின் குடி மக்களைக் கேட்டு உரையாற்றி னார்.

இன்ஸ்டாகிராமில் அனுஷ்கா ஷர்மா பகிர்ந்த வீடியோவில், விராட் கோஹ்லியுடன் சேர்ந்து இந்த சோதனை காலங்களில் சுய தனிமைப்படுத்தப்படுவதன் மூலம் பாதுகாப்பாக இருக்கு மாறு நாட்டுக் குடி மக்களைக் கேட்டுக் கொண்டார்.

கொரோனாவைரஸ் பரவுவதைத் தடுப்பதற் கான ஒரே வழி ஒன்றா கச் செயல்படு வதே என்று அனு ஷ்கா ஷர்மா மேலும் கூறி னார்.

கொரோனாவைரஸ் நாவலுக்கு எதிரான போராட்டத்தில் பிரதம ரின் பாதுகாப்பு விதி முறைகளைப் பின்பற் றுமாறு மக்களை வலி யுறுத்தி இந்திய கப்டன் ஏற்கனவே வியாழக் கிழமை இரவு ட்விட் செய்திருந்தார்.

கொரோனா வைரஸ் (கோவிட் - 19 தொற் றுநோயை அடுத்து, நாம் எச்சரிக்கையாகவும், கவனம ாகவும் விழிப் புடனும் இருக்க வேண்டும். நம் பிரதமர் மோடி அறிவித்த படி, பொறுப்புள்ள குடிம க்களாகிய நாம் நம் பாதுகாப்பிற்காக வகுக்கப்பட்டுள்ள விதிமுறைகளைப் பின்பற்ற வேண்டும்., என்று கோஹ்லி ட்விட்டில் பதிவிட்டார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணி முதல் இரவு 9 மணி வரை 'ஊரடங்கு உத்தரவு' தேர்வு செய்யுமாறு பிரதமர் மோடி வியாழக்கிழமை வலியுறுத்தினார்.

கொரோனா வைரஸ் வழக்கு கள் தொடர்ந்து அதிகரித்து வருவ தால், உலகெங்கிலும் உள்ள பெரும் பாலான விளையாட்டு நிகழ்வு கள் ஒத்திவைக்கப்பட்டன அல்லது ரத்து செய்யப்பட்டுள்ளன.

கொரோனா வைரஸ் பரவாமல் தடுக்க இந்திய கிரிக்கெட் அணி யின் மிக சமீபத்திய ஒருநாள் தொடர் தென்னாப்பிரிக்காவுக்கு எதிராக நிறுத்தப்பட்டது.

# ஒலிம்பிக் போட்டிகளுக்கு தயாராகுங்கள் வீரர்களே!




ஒலிம்பிக் போட்டிகளில் கலந்து கொள்ள ஏதுவாக தயாராகும்படி விளை யாட்டு வீரர்களை சர்வதேச ஒலிம்பிக் குழு அறிவுறுத்தியுள்ளது.

உலகையே அச்சுறுத்திவரும் கொரோனா வைரஸ் தொற்று காரண மாக ஒலிம்பிக் போட்டிகளை ஒத்தி வைக்குமாறு உலகநாடுகள் கோரிக்கை விடுத்து வருகின்றன.

எனினும், நடப்பு ஆண்டு ரோக் கியோ ஒலிம்பிக் போட்டிகளை ஒத்தி வைப்பது தொடர்பாக தற்போதைக்கு எந்த திட்டமும் இல்லை என சர்வதேச ஒலிம்பிக் குழு திட்டவட்டமாக கூறியுள் ளது.

அத்துடன், ஒலிம்பிக் போட்டி நடை பெற 4 மாதங்கள் உள்ள சூழலில், போட்டியை இரத்து செய்வது குறித்து தற்போது முடிவு எடுக்க தேவையில்லை என தீர்மானிக்கப்பட்டது. மேலும், ஒலிம் பிக் போட்டி இரத்தானால் ஜப்பானுக்கு மிகப்பெரிய இழப்பு ஏற்படும் என்று கூறப்படுகிறது.

ஆகவே, 56 ஆண்டுகளுக்கு பிறகு கிடைத்து இருக்கும் ஒலிம்பிக் வாய்ப்பை நழுவ விட்டு விடக்கூடாது என்பதில் ஜப்பான் அரசும் எல்லாவிதமான முன் னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகிறது.

இதற்கிடையில், ஒலிம்பிக் தொடர் விவகாரத்தில் சர்வதேச ஒலிம்பிக் குழு வின் முடிவுக்கு எதிராக, ஒலிம்பிக்கில் பங்கேற்கவுள்ள விளையாட்டு வீரர்கள் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர்.

வழக்கமாக ஒலிம்பிக் தொடங்குவ தற்கு முன்பாக ஒலிம்பிக் தீபம் அது பிறந்த நாடான கிரேக்க நாட்டின் ஒலிம் பியா நகரில் ஏற்றப்படுவது வழக்கம்.

இதன்படி கடந்த 12ஆம் திகதி ஒலிம்பிக் தீபம் ஒலிம்பியாவில் பாரம் பரிய முறைப்படி ஏற்றப்பட்டது. பிறகு ஒலிம்பிக் தீபம் ஒரு வாரம் கிரீஸ் நாட்டில் தொடர் ஓட்டமாக எடுத்து செல்லப்படும் என்று அறிவிக்கப்பட்டது. ஆனால் கொரோனா அச்சத்தால் ஒலிம்பிக் ஜோதியின் தொடர் ஓட்டம் ஓரிரு நாள் களுடன் நிறுத்தப்பட்டது.

இந்த நிலையில் ஒலிம்பிக் தீபத்தை பெற்றுக்கொள்வதற்காக ஜப்பானில் இருந்து 'ரோக்கியோ 2020' என்ற பெயருடன் சிறப்பு விமானம் நேற்று கிரேக்க நாட்டுக்கு சென்றது. இதன் பின்னர் ஒலிம் பிக் தீபம் டோக்கியோ நகருக்கு கொண்டு வரப்பட்டு உள்ளது.

32ஆவது கோடைக்கால ஒலிம் பிக் போட்டிகள், எதிர்வரும் ஜூலை மாதம் 24ஆம் திகதி முதல் ஒகஸ்ட் மாதம் 9ஆம் திகதி வரை, ஜப்பா னின் டோக்கியோவில் நடத்த திட்ட மிடப்பட்டுள்ளது.

உலகின் மிகப் பெரிய விளை யாட்டு தொடரான ஒலிம்பிக் தொடரை நடத்துவதற்கு ஜப்பான் கடந்த இரண்டு வருடங்களாக, பல திட்டங் களை முன்னெடுத்து வருகின்றது.

குறிப்பாக அரசின் பெருமள வான நிதியினால் கடந்த இரண்டு வருடங்களாக உருவாக்கப்பட்டு வந்த பிர மாண்ட விளையாட்டு அரங்குகள் தற் போது போட்டிகளை நடத்த தயாராக வுள்ளது.

குறித்த கோடைக்கால ஒலிம்பிக் தொடரில், வெப்பத்தை கட்டுப்படுத்தும் வகையில் அரங்கத்தின் கூரைகள் மரத்தில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

இதன் மூலம் பார்வையாளர்கள் மற்றும் வீரர்களை குளிர்சியாக வைத் திருக்க முடியுமென வடிவமைப்பா ளர்கள் நம்புகின்றனர்.

இந்தக் கோடைக்கால ஒலிப்பிக் தொடரில், பாதுகாப்பு நடவடிக்கையின் ஒரு பகுதியாக, முகத்தின் மூலம் ஒரு வரை அடையாளம் காணும் முறை மையை போட்டி அமைப்பாளர்கள் அறிமுகப்படுத்தவுள்ளனர்.

206 நாடுகள் பங்கேற்கும் இத் தொடரில், 33 விளையாட்டுகளில் இருந்து 339 விளையாட்டு போட்டிகள் நடைபெறவுள்ளன. இந்த தொடரில் 11,091 போட்டியாளர்கள் பங்கேற்பார் கள் என எதிர்பார்க்கப்படுகின்றது.

அத்தோடு, இந்த ஒலிம்பிக் போட்டி களில், பெண்களுக்கு அதிக முக்கியத் துவம் கொடுக்கும் வகையில், கோடைக் கால ஒலிம்பிக் தொடரில், 7 புதிய விளையாட்டுக்கள் அறிமுகப்படுத் தவுள்ளன. இதனை சர்வதேச ஒலிம் பிக் குழுவும் உறுதிப்படுத்தியுள்ளது.

அதேபோல, கோடைகால பரா ஒலிம் பிக் போட்டிகள், எதிர்வரும் ஒகஸ்ட் மாதம் 25ஆம் திகதி முதல் எதிர்வரும் செப்டம்பர் 6ஆம் திகதி வரை டோக்கி யோவில் நடைபெறவுள்ளது

ரோக்கியோவில் உள்ள புதிய தேசிய விளையாட்டரங்கில் நடைபெறவுள்ள இந்த போட்டித் தொடரில், 22 விளை யாட்டுக்களில் இருந்து 540 பிரிவுகளில் விளையாட்டு போட்டிகள் நடைபெறு கின்றன.

# அத்தியாவசியப் பொருள்களை வாங்கிக் குவிப்பது சரியல்ல!




அவசர காலக்கட்டத்தில் அத்தியாவ சியப் பொருட்களை வாங்கி குவிப்பது நியாயம் அல்ல என தென்னாபிரிக்கக் கிரிக்கெட் அணியின் முன்னணி வேகப் பந்து வீச்சாளர் டேல் ஸ்டெயின் தெரிவித் துள்ளார்.

கொரோனா வைரஸ் தொற்று அசுர வேகத்தில் பரவத் தொடங்கியதால் பொது மக்கள் அத்தியாவசிய பொருள்களை வாங்கி குவிக்கின்றனர்.

இதனால் அனைவருக்கும் அந்த பொருள்கள் கிடைக்காத நிலை ஏற்பட் டுள்ளது. மேலும் தட்டுப்பாட்டால் விலை யும் அதிகரித்துள்ளது.

இந்தநிலையில் இம்முறைமை குறித்து டேல் ஸ்டெயின் விமர்சித்துள் ளார். இதுகுறித்து ஸ்டெயின் கூறுகை யில் அத்தியாவசியப் பொருள்களை மொத்தமாக வாங்கி வைப்பது சரியான வழி அல்ல என்பதை நாம் முடிவு செய்ய வேண்டும். அனைவருக்கும் தேவை யான பொருட்களை இப்படி வாங்குவது நியாயம் அல்ல.

நான் அருகில் உள்ள மளிகை கடைக்கு சென்றிருந்தேன். அங்கு அனைவரும் டாய்லெட் பேப்பர்களை வாங்கிச் சென்றனர். நமக்கு என்ன வேண்டுமோ? அதை மட்டும் வாங்க வேண் டும். எல்லாமே அவசியம் என்று நாம் கருதக்கூடாது என்றார். என கூறினார்.

## கொரோனா வைரசின்

(11 ஆம் பக்கம் பார்க்க...)

அருகில் உள்ள நேபாளத்துடன் சர்வதேச எல்லையை பகிரும் ஐந்து மாநிலங்களில் எல்லைப் பகுதியில் வாழும் 27,000க்கும் மேற்பட்டவர்களின் உடல்நிலை தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகிறது. அந்தப் பகுதிகளில் 10 லட்சம் பேருக்கு மருத்துவப் பரிசோதனைகள் செய்யப்பட்டுள்ளன என்று அவர் குறிப்பிட்டுள்ளார். ஈரானிலிருந்து இந்தியாவுக்குத் திரும்பி வருபவர்களைப் பரிசோதிப்பதற்காக, ஈரானில் ஓர் ஆய்வகத்தை இந்தியா அமைக்கிறது.

இந்த வார இறுதிக்குள் இந்தியா முழுக்க 34 பரிசோதனை நிலையங்களில் இந்த வைரஸ் பரிசோதனை வசதிகள் ஏற்படுத்தப்படும்.

இந்த வைரஸ் தீவிரமாகப் பரவ நேரிட்டால் நிலைமையை எப்படிக் கையாள்வது என்று சுகாதாரத் துறை அலுவலர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது என்றும், அரசு மருத்துவமனைகளில் தனிமைப்படுத்தி சிகிச்சை அளிப்பதற்கான வார்டு வசதிகள் உருவாக்கப்படுகின்றன எனவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இந்திய அரசால் விதிக்கப்பட்டுள்ள பயணக்கட்டுபாடுகள் என்னென்ன?

இந்தியர்கள் வெளிநாட்டிற்கு பயணம் செய்து திரும்பினால் குறைந்தது 14 நாள்கள் தனிமைப்படுத்தப்படுத்தப்படலாம் என இந்திய சுகாதாரத் துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இத்தாலி, சீனா, இரான், கொரியா, பிரான்ஸ், ஸ்பெயின் மற்றும் ஜெர்மனியிலிருந்து பிப்ரவரி 15ஆம் தேதிக்கு பிறகு வந்தவர்கள் அனைவரையும் 14 நாள்களுக்கு தனிமைப் படுத்தப்பட வேண்டும்.

இந்தியர்கள் அவசியமில்லாத பயணங்களை ரத்து செய்ய கேட்டு கொள்ளப்படுகின்றனர். மேலும் வெளிநாட்டுக்கு பயணம் செய்து வருபவர்கள் 14 நாளகளுக்கு தனிமைப்படுத்தப்படுவர், என்றும் சுகாதாரத்துறை தெரிவித்துள்ளது.

மாஸ்க் அணிவது பயன் தருமா?

காற்றில் உலவும் பாக்டீரியா அல்லது வைரஸை தடுப்பதற்கு மருத்துவர்கள் பயன்படுத்தும் மாஸ்க் பெரிய பலனை தராது. அந்த மாஸ்க் அழுத்தமாக இருக்காது என்பதாலும், அதில் காற்று தடுப்பான் இல்லை என்பதாலும், கண்கள் மூடப்படாது என்பதாலும் அவ்வளவு பலனை தராது என்கிறார் லண்டன் பல்கலைக்கழகத்தின் டேவிட் காரிங்டன்

உங்களை நீங்களே எவ்வாறு தனிமைப்படுத்திக் கொள்ளலாம்?

நீங்கள் வெளியிடங்களுக்கு செல்வதை தவிர்க்க வேண்டும். பள்ளி, பணி மற்றும் பொது இடங்களுக்கு செல்லக் கூடாது. மேலும் உங்கள் வீட்டில் உள்ளவர்களிடமிருந்து தள்ளி இருங்கள்.

# சலூன்களை இரண்டு வாரங்களுக்கு மூடுமாறு மாநகர மேயர் கோரிக்கை



கொரோனா வைரஸ் தாக்கத்தலிருந்து மக்களைப் பாதுகாப்பதற்காக சிகை ஒப்பனை நிலையங்களை மூடி ஒத்துழைப்பு வழங்குமாறு யாழ் மாநகர முதல்வர் இம்மானுவல் ஆனல்ட், சிகை ஒப்பனையாளர்கள் சங்கத்திடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் யாழ் மாவட்ட சிகை ஒப்பனையாளர் சங்கத்திற்கு நேற்றுத் தாம் அனுப்பி வைத்துள்ள கடிதத்திலேயே அவர் மேற்குறித்த விடயம் தொடர்பில் கோரிக்கை விடுத்துள்ளார். அவர் அக்கடிதத்தில் மேலும் குறிப்பிட்டுள்ளவை வருமாறு: -

உலகில் பரவிவரும் கொரோனா வைரஸ் தொற்று நோய் தாக்கம் குறித்து அனைவரும் அறிந்திருக்கின்றோம். இந்நிலையில் இவ் வைரஸ் தாக்கமானது வடக்கு மாகாணத்தில் இதுவரை ஏற்படவில்லை என்று, எவ்வித முன்னெச்சரிக்கையும், முன்னேற்பாடுகளுமின்றி அசமந்த போக்கில் இருக்கின்றோம். எனவே இது தொடர்பில் விசேட கவனம் செலுத்த வேண்டியுள்ளது.

கடந்த 17.03.2020 அன்று வடக்கு மாகாண சுகாதார அமைச்சில் கொரோனா வைரஸ்கட்டுப்பாடு தொடர்பாக நடைபெற்ற விசேட கலந்துரையாடலில் பல்வேறு விடயங்கள் ஆராயப்பட்டன. விசேடமாக கொரோனா வைரஸ் நோய் தொடர்பில் முன்னெச்சரிக்கையுடன் கூடிய கட்டுப்பாட்டை மேற்கொள்ளும் விதமாக எதிர்வரும் இரு வாரங்களுக்கு பொது மக்களின் தேவையற்ற நடமாட்டங்களை யாழ் நகர்ப்பகுதியில் மட்டுப்படுத்தும் விதமாக மக்களின் அத்தியவசிய தேவைகளை நிறைவு செய்யும் பலசரக்கு வியாபார நிலையங்கள், உணவகங்கள், மருந்தகங்கள் தவிர்ந்த ஏனைய அத்தியாவசியமற்ற வியாபார நிலையங்களை மூட உரிய தரப்பினருக்கு அறிவுறுத்தல்களை வழங்கி மக்கள் நடமாட்டத்தை மட்டுப்படுத்துவது எனத் தீர்மானிக்கப்பட்டது.

இந் நிலையில் சிகை ஒப்பனை நிலையங்களினூடாக குறித்த வைரஸ் தொற்று அதிகளவில் பரவுவதற்கான வாய்ப்புக்கள் காணப்படுகின்றமையை இங்கு சுட்டிக் காட்ட விரும்புகின்றேன்.

எனவே 21.03.2020 தொடக்கம் நடைமுறைக்கு வரும் வகையில் எதிர்வரும் இரு வாரங்களுக்கு தங்கள் நிர்வாகத்திக் கீழ் செயற்பட்டுக்கொண்டிருக் கும் அனைத்து சிகை ஒப்பனை நிலையங்களையும் மூடி பொது மக்கள் நடமாட்டத்தை மட்டுப்படுத்துவதற்கும், இக் கொடிய நோய்த் தாக்கத்திலிருந்து தங்களையும், மக்களையும் பாதுகாப்பதற்கு நாம் எடுக்கும் முயற்சிகளுக்கு ஒத்துழைப்பு வழங்கு மாறு தங்களை அன்புரிமையோடு கேட்டுக் கொள்கின்றேன். - என்றுள்ளது.



# கொரோனா விழிப்புணர்வு நடவடிக்கையில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள்







வவுனியாவில் ஆயிரத்து நூறு நாள்கள் கடந்தும் சுழற்சி முறையிலான உணவு தவிர்ப்பு போராட்டத்தை முன்னெடுத்து வரும் தமிழர் தாயகத்தில் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளைத் தேடிக்கண்டறியும் சங்கத்தினர் தற்போது உலகம் முழுவதும் வேகமாக பரவி உயிர் அச்சுறுத்தலையும், மரணத்தையும் ஏற்படுத்தி வரும் கொரோனா வைரஸ் கிருமியின் தாக்கத்திலிருந்து பொதுமக்களை பாதுகாக்கும் விழிப்புணர்வு நடவடிக்கையை ஆரம்பித்துள்ளனர்.

காணாமல் ஆக்கப்பட்டோரைத் தேடிக்கண்டறியும் உறவுகளால் வவுனியாவில் நடத்தப்பட்டு வரும் சுழற்சி முறையிலான உணவு தவிர்ப்பு போராட்டம் கடந்த 18.03.2020 புதன் கிழமை அன்று ஆயிரத்து நூற்று இருபத்தைந்து நாள்களை (1125) எட்டியுள்ள நிலையில், தமது போராட்ட கொட்டகைக்கு முன்பாக ஏ9 வீதியால் பயணிக்கும் முதியவர்கள், சிறுவர்கள், தாய்மார்கள் எனப்பொதுமக்கள்பலரும்கைகளைநன்குசவர்க்காரமிட்டு கழுவிச் சுத்தமாக இருப்பதற்கு ஏற்றவாறு தண்ணீர்த் தாங்கி வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்துள்ளனர்.

இந்த முன்னெச்சரிக்கை பாதுகாப்பு ஏற்பாடுகள் தொடர்பில் தமிழர் தாயக சங்கத்தின் செயலாளர் கோ.ராஜ்குமார் கருத்து தெரிவிக்கையில் –

இந்தப் பயங்கர கொரோனோ வைரஸ் உலகம் முழுவதும், குறிப்பாக நமது தமிழர் தாயகத்திற்கு பரவுவதைக் கண்டு வருத்தப்படுகிறோம்.

இந்த ஆபத்தான நேரத்தில் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும், என்ன செய்ய வேண்டும் என்பதைக் கூற எங்களுக்கு எந்த அதிகாரமும் இல்லை. சிங்கள கொழும்பு அரசாங்கத்திடமே அனைத்து கட்டுப்பாடுகளும்.

எங்களிடம் உண்மையான சமஷ்டி இருந்தால், இந்த கொரோனா வைரஸின் பரவலை எவ்வாறு தடுப்பது என்பதில் எங்களுக்கு அதிகாரம் இருக்கும்.

அமெரிக்காவை எடுத்துக் கொள்ளுங்கள். சொந்த மாநில அதிகாரத்துடன் 50 மாநிலங்கள் உள்ளன. வொஷிங்டன் அரசாங்கத்திற்கு இந்த மாநிலங்களை கட்டுப்படுத்த எந்த அதிகாரமும் இல்லை. அமெரிக்காவில், கொரோனா வைரஸைக் கட்டுப்படுத்த நியூயோர்க் மாநிலம் எல்லாவற்றையும் செய்து வருகிறது. வைரஸ் பரவுவதைக் கட்டுப்படுத்த நியூயோர்க் அண்டை மாநிலங்களுடன் பேசுகிறது. இது கூட்டாட்சி வாதத்தின் சக்தி.

கூட்டாட்சி என்றால் என்ன என்பதை நமது அரசியல்வாதிகள் மற்றும் புத்திஜீவிகள் கற்றுக்கொள்ள வேண்டும்.

இந்த அரசியல்வாதிகள் மற்றும் புத்திஜீவிகள் சமஷ்டி என்றால் கொழும்பு பிரதிநிதி ஆளுநருக்கு அதிகாரம் கொடுப்பதை பற்றி பேசுகிறார்கள். சம்ஷ்டி என்றால் கொழும்பு பிரதிநிதியாக ஆளுநர் இருக்கக்கூடாது . அவர்களின் பரிந்துரை கூட்டாட்சி வாதத்தின் பொதுவான கொள்கையுடன் இணங்கவில்லை. – என்று தெரிவித்தார்.

## கொரோனா பரவலுக்கான பிரதான காரணம் இதுதான்!

கொழும்பு, மார்ச் 21

கொரோனா வைரஸ் பரவலுக்கான பிரதான காரணமாக அமைவது புகைப்பிடித்தல் என அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

கொழும்பில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்ட அந்தச் சங்கத்தின் செயலாளர் வைத்திய ஹரித அலுத்கே இதனை தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்தும் கருத்து தெரிவித்த அவர்–

தற்போது காணப்படும் சட்டம் போதுமானதாக இல்லையென்றால் புதிதாகச் சட்டமொன்றை இயற்றியாவது நாட்டினுள் அவசர நிலையை அறிவிக்க வேண்டும். வர்த்தமானி அறிவித்தல் ஊடாக இதனை சட்டமாக்க வேண்டும் – என்றார்.

இதேவேளை, புகைபிடித்தல் வைரஸ் பரவுவதில் நேரடித் தாக்கத்தை ஏற்படுவத்துவதாக தெரிவித்த அவர், சிகரெட் விற்பனை மிகவும் அவதானத்திற்கு உட்பட்டது எனவும் தெரிவித்தார்.

புகைக்கும் நபர்களுக்கு நோய் தொற்று ஏற்படும் சதவீதம் மிகவும் அதிகம் எனத் தெரிவித்த வைத்தியர் ஹரித அலுத்கே, உயிரை நேசிப்பவர்களாயின் உடனடி யாக புகைப்பதை நிறுத்துமாறும் அறிவுறுத்தியுள்ளார்.

## அத்தியாவசிய சேவைகளுக்கு ஊரடங்கு இடையூறு ஆகாது

கொழும்பு, மார்ச் 21

ஊரடங்கு சட்டம் அத்தியாவசிய சேவைகளை பராமரித்து செல்வதற்கு இடையூறாக அமையாது என அமைச்சரவை இணைப் பேச்சாளர் கலாநிதி பந்துல குணவர்தன தெரி வித்துள்ளார்.

அரச தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்தும் கருத்து தெரிவித்த அமைச்சர், விசேடமாக சுகாதாரப் பிரிவு, பாதுகாப்புப் பிரிவு, தனிநபர் பாதுகாப்புக் சேவைகள், துறைமுகங்கள் போன்ற அத்தியாவசிய சேவைகளை வழங்கும் அரச நிறுவனங்கள் ஆகிய சேவைகளுக்கு இந்த ஊரடங்கு சட்டம் எவ்விதத்திலும் பாதிப்பை ஏற்படுத்தாது.

ஏதேனும் அத்தியாவசியச் செயற்பாடுகளுக்காக பொலிஸ் நிலையத்திற்குச் சென்று அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்வதற்கான அறிக்கை மதியம் வெளியிடப்படும்.

தற்போது வார இறுதியில் ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளதால் வீடுகளிலிருந்து வெளியேறாமல் தானாகவே தனிமைப்படுத்தும் செயற்பாட்டில் ஈடுபட வேண்டும் – என்றார்.

வெளிநாடுகளுக்கான துரித தபால்கள், பொதிகள் சேவை




20 வருட கால அசைக்க முடியாத நம்பிக்கையை வென்ற நாம்

அருள்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட்

இல.10 மாநகர சபை புதிய கட்டத் தொகுதி, கஸ்தூரியார் விதி யாழ்ப்பாணம்.

021 222 3536

நெல்லியடியில் – இல, 01, பெற்றோல் செற்லேன், நெல்லியடி, 076 443 1576

சாவகச்சேரி – இல.01 NDB வங்கிக் கட்டடம், தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி. 076 443 1576

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள காலைக்கதிர் பிறஸ் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 21.03.2020 இல் வெளியிடப்பெற்றது.